பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஆவணி 26 புதன்கிழமை 11.09.2019 | கதிர் 310

## இது ரகசியம் அல்ல!

வீதி விபத்துக்கள் குறித்து அதிகம் அச்சம் நிலவும் இந்தக் காலகட்டத்தில் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன பெரிய குண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டியிருக்கின்றார்.

அதனால் பஸ் பக்கம் 02 »



## காணாமற்போனோரின் உறவினர்கள் 14ஆம் திகதி மாபெரும் போராட்டம்!

### யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், செப். 11

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எதிர்வரும் 14 ஆம் மாபெரும் போராட்டமொன்றை யாழ்ப்பாணத்தில் நடத்த உள்ளனர் எனவும், அதனைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களில் நடைபெறுவது போன்று தொடர்ச்சியான போராட்டம் இங்கும் பக்கம் 03 »

# சிறுபான்மைக் கட்சிகளுடனும் பேசியே ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு!

### சஜித்திடம் நேற்று இரவு அடித்துக் கூறினார் ரணில் தீர்மானம் எதுவும் இல்லாமலேயே முடிந்தது பேச்சு

கொழும்பு, செப். 11

ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் மட்டுமல்ல, இதர தோழமைக் கட்சிகளின் தலைவர்களுடனும் பேச்சு நடத்தி, அதன் பின்னர் கட்சிக்குள்ளும் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி வேட்பாளர் விடயத்தில் தீர்வு காணப்படும்.

– இவ்வாறு நேற்று இரவு அமைச்சர் சஜித் பிரேமதாஸ மற்றும் அவருக்கு நெருக்கமான அமைச்சர்களிடம் உறுதியாகக் கூறிவிட்டார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. பக்கம் 03 »

## மன்றில் வியாக்கியானம் கோருவது மைத்திரிக்கு இனிமேலும் அழகல்ல!

### கூறுகின்றார் ஜி.எல். பீரிஸ்



கொழும்பு, செப். 11

தனது பதவிக்காலம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்ந்து உயர்நீதிமன்றத்தில் பக்கம் 03 »

## மரண தண்டனைக்கு யாழில் 94 வீதமானோர் ஆதரவாம்



யாழ்ப்பாணம், செப். 11

யாழ். கோட்டை முற்றவெளியில் தற்போது இடம்பெற்றுவரும் என்ரர்பிரைஸ் ஶ்ரீலங்கா கண்காட்சியில், மரண தண்டனை பக்கம் 03 »

## தமிழ் இளைஞர் ஒருவர் ஆஸியில் மர்ம மரணம்!



கான்பரா, செப். 11

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதான குமார் பகீதரன் என்ற இளைஞன், ஆஸ்திரேலியாவில் மர்மமான முறை பக்கம் 03 »

## சு.க. தனித்துப் போட்டியிட்டால் மொட்டுக்குப் பாதிப்பேயில்லை

### அடித்துக் கூறுகிறார் மஹிந்த யாப்பா



கொழும்பு, செப். 11

பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தை எந்தக் காரணத்துக்காகவும் மாற்றுவதற்கு இடமளிக்க முடியாது. இதில் எவ்வித பக்கம் 03 »

## இலங்கை அணி வீரர்களை மிரட்டியுள்ளதாம் இந்தியா

### பாக். அமைச்சர் பரபரப்புக் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், செப். 11

இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் பாகிஸ்தான் சென்று விளையாடக் கூடாது என இந்தியா மிரட்டியிருப்பதாகப் பாகிஸ்தான் அமைச்சர் ஹம்சா அமீர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009 இல் பாகிஸ்தான் பக்கம் 03 »

## திலங்கவுக்கு தடை போட்டார் ஹரீன்!

### அரசியல் மோதல் உச்சக்கட்டத்தில்

கொழும்பு, செப். 11

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவரும் ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான திலங்க சுமதிபால, இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் எந்தப் பக்கம் 02 »

## பெற்றோலின் விலை 1 ரூபாவால் குறைப்பு

கொழும்பு, செப். 11

95 ஒக்ரைன் பெற்றோலின் விலை ஒரு ரூபாவாலும் சுப்பர் டீசலின் விலை 2 ரூபாவாலும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டு பக்கம் 03 »

## இரு தமிழ் இளைஞர்கள் ரொறன்ரோவில் கைது!

ரொறன்ரோ, செப். 11

கனடா – ரொறன்ரோ டவுண்ரவுன் மத்திய பகுதியில் உள்ள துரித உணவகம் ஒன்றில், துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய இரண்டு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பக்கம் 03 »

## பாலிதவுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, செப். 11

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி அமைச்சர் பாலித தேவரப்பெருமவை எதிர்வரும் செப்ரெம்பர் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மத்துகம நீதவான் நீதிமன்றம் பக்கம் 03 »

### விக்னேஸ்வரனுக்கு எதிரான

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நவ. 18,19,21 இல் விசாரணை

கொழும்பு, செப். 11

நீதிமன்றத்தை அவமதித்தார் எனத் தெரிவித்து முன்னாள் வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கும் மற்றைய இரண்டு அமைச்சர்களுக்கும் எதிராக வடக்கு மாகாண சபையின் முன்னாள் போக்குவரத்து அமைச்சர் பக்கம் 03 »

# அரசியல் உரிமை பெறும்வரை ஒன்றுபடுவோம் ‘எழுக தமிழை’ முழுமையாக ஆதரிக்கின்றோம்!

## யாழ் பல்கலைகழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 11

எமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கு அரசியல் ரீதியாக ஈழத் தமிழர்களாகிய நாம் எம்மைப் பலப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. இன்று எமது பிரதிநிதித்துவப் பலத்தை சிதறடிக்கின்றவகையில் தமிழ்த் தேசிய பரப்பில் மூன்று தரப்புகளாகப் பிளவுபட்டு நிற்கின்றோம். உண்மையாக தேசியத்தை நேசிப்பவர்களாக இருந்தால் மூன்று தரப்புகளாய்ப் பிளவுபட்டு நிற்கும் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட முடியும். இங்கு தமிழ்த் தேசியத்தின் நலனை விடக் கட்சிகளின் நலன்களே முதன்மை பெறுவதனாலேயே இத்தகைய பிளவுகள் ஏற்படுகின்றன. இன்றைய சூழலில் தேசியத்தை நேசிக்கும் தரப்புகள் ஒற்றுமைப்படவேண்டியது மிக மிக அவசியமானதாகும் எனயாழ்.பல்கலைகழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

‘எமுக தமிழ்’ நிகழ்வை ஆதரித்து மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் –

தமிழ்த்தேசியப் பரப்பில் மக்கள்எழுச்சிப் போராட்டங்கள்வலுப்பெற வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மானது தமிழ் தேசிய உரிமைப் போராட்டத்துக்குத் தன்னாலான பங்களிப்பை என்றும் வழங்கி வந்துள்ளது. ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற் கான மக்கள் எழுச்சிப் போராட் டமாகிய எழுக தமிழுக்குக் காலத் தின் தேவை உணர்ந்து நாம் பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கு கிறோம்.

வரலாற்றில் இருந்து தமிழ் மக்கள் பாடம் கற்றுக்கொள்ளத் தவறியதன்விளைவாகவே இன்று வரையில் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு கொண்டிருக்கின்றோம். தமிழ் மக்களின் பூர்வீக தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாக இனப் பரம்பலை மாற்றியமைக்கும் வகையிலான திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்களும், விகாரைகளும் அமைக்கப்படுவதை தடுக்க முடியாமல் இருக்கிறோம்.

இதனை அறிந்து கொள்ளாதவர்களாய் கட்சிகளாகப் பிரிந்து நின்று அடிபடுவது ஆரோக்கியமானதா? எமதுஅரசியல் உரிமைகளினை வென்றெடுக்கும் வரையிலாவது குறைந்தபட்சம் நாம் போராட்ட களத்தில் என்றாலும் ஒன்றுபட்டு நிற்க வேண்டியது தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் எங்கள் ஒவ்வொவரினதும் தார்மீகக் கடமையாகும்.

தமிழ் மக்களின் கோரிக்கைகளை வலுப்படுத்த எழுக தமிழ் போன்ற மக்கள் எழுச்சிப் போராட்டங்களும் தமிழ் மக்கள் பேரவை போன்றதான மக்கள் இயக்கம் என்பனவும் காலத்தின் கட்டாய தேவையாக உள்ளன. தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்று வரையில் மக்கள் தாமாகவே முன்னெடுத்த தன்னெழுச்சிப் போராட்டங்களில் பேரவை எத்தகைய வகிபாகங்களைக் கொண்டிருந்தது என்பது கேள்விக்குரிய ஓர் விடயமாக உள்ளது. அது மட்டுமன்றி இன்று பேரவை மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகளில் இருந்து பேரவை மீண்டெழுவதற்கு தன்னை சுயவிமர்சனம் செய்து கொண்டுஅதன்ஊடாகத்தன்னை மறுசீரமைத்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாய கடமையாகும். இதனை தமிழ் மக்கள் பேரவையினரும் ஏற்றுக் கொண்டு எழுக தமிழிற்குப் பிற்பட்ட குறுகிய காலத்தில் மறுசீரமைப்பை மேற்கொள்வதாக அளித்த வாக்குறுதியின் மீது மாணவர் ஒன்றியம் நம்பிக்கை கொள்கின்றது.

தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளினை வென்றெடுக்கும் வரையிலாவது குறைந்தபட்சம் தமிழ் மக்களை ஓரணியாக ஒன்றுதிரட்டி ஓர் குடையின் கீழ் வைத்திருக்க இன்றைய காலச் சூழலில் அரசியல் கட்சிகளினால் முடியாதுள்ளது.

மாறாக அத்தகைய கடமையினை ஓர் மக்கள் இயக்கம் ஒன்றின் மூலமாகவே சாத்தியப்படுத்த முடியும். இத்தகையதொரு சூழலில் தான் மக்கள் இயக்கம் ஒன்றினை பலப்படுத்த வேண்டிய இக்கட்டான ஓர் காலகட்டத்தில் இன்று தமிழ் சமூகம் உள்ளது என்பதை மறுதலிக்க முடியாது.

நாம் எமது அரசியல் உரிமைகளினை வென்றெடுப்பதற்கு அரசியல் ரீதியாக ஈழத்தமிழர்களாகிய நாம் எம்மை பலப்படுத்த வேண்டியதேவையுள்ளது. இன்று எமது பிரதிநிதித்துவப் பலத்தை சிதறடிக்கின்ற வகையில் தமிழ் தேசிய பரப்பில் மூன்று தரப்புகளாக பிளவுபட்டு நிற்கின்றோம். உண்மையாக தேசியத்தை நேசிப்பவர்களாக இருந்தால் மூன்று தரப்புகளாய்ப் பிளவுபட்டு நிற்கும் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட முடியும். இங்கு தமிழ் தேசியத்தின் நலனை விட கட்சிகளின் நலன்களே முதன்மை பெறுவதனாலேயே இத்தகைய பிளவுகள் ஏற்படுகின்றன. இன்றைய சூழலில் தேசியத்தை நேசிக்கும் தரப்புகள் ஒற்றுமைப்பட வேண்டியது மிக மிக அவசியமானதாகும்.

போர்க்குற்றவாளிகள் சர்வதேச நீதிமன்றில் முன்னிறுத்த வலியுறுத்தியும், அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் உரிய தீர்வினை பெற்றுத்தர வலியுறுத்தியும், திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புக்களை தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக போராட்டங்களினை மேற்கொண்டு வருகின்ற நிலையில் அத்தகைய போராட்டங்களினை கண்டுகொள்ளாது தென்னிலங்கை அரசியல்வாதிகள் தாம் ஆட்சி அதிகாரத்தினை கைப்பற்றுவதிலேயே அதிக கரிசனை செலுத்துவதோடு அதற்காக போர்க்குற்றங்களோடு தொடர்புடையவர்களினை முன்னிலைப்படுத்தும் போக்கும் காணப்படுகின்றது. இதனை தட்டிக்கேட்கும் திராணி தமிழ்த்தேசிய பரப்பில் உள்ளவர்களிடம் இல்லாதுள்ளமை வேதனைக்குரிய விடயமாகும். எனவே இன்றைய தேர்தல் காலச் சூழலினை கையாளுவதற்கு எழுக தமிழ் மக்கள் எழுச்சி ஓர் காத்திரமான செய்தியைத் தென்னிலங்கைக்கு வழங்க இந்த மக்கள் எழுச்சியை பலப்படுத்த வேண்டும்.

தமிழ்த் தேசியத்தின் மீது உண்மையான அக்கறை கொண்டவர்கள் எவருமே இத்தகைய மக்கள் எழுச்சி போராட்டத்திற்கு ஆதரவு வழங்காமல் பின்னடிக்க முடியாது என்பதனாலேயே பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினராகிய நாம் எமது பூரண ஆதரவினை வழங்க முன்வந்துள்ளோம். அதுபோல தமிழ் தேசியத்தினை நேசிக்கும் தரப்புகள் பாகுபாடுகளினை மறந்து தமிழ்த்தேசியத்தினை வலுப்படுத்த அணி திரள வேண்டும்.

எழுக தமிழ் பேரணியில் வலியுறுத்தப்படும் பிரதான கோரிக்கைகளான,

1. சிங்கள பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்து.

2. சர்வதேச போர்க்குற்ற விசாரணையை நடத்து.

3. தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்

4. வலிந்துகாணமலாக்கப்பட்டோர் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்து.

5. வடக்கு – கிழக்கில் இராணுவ மயமாக்கலை நிறுத்து.

6. இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களது பாரம்பரிய வாழ் விடங்களில் மீளக் குடியமர்த்து.

–என்பவை தமிழ்த்தரப்பு மீதான ஒடுக்கு முறைக்கு நிகழ்கால சான்றுகளாகும். இத்தகு கோரிக்கைகளை முன்னிறுத்தி மேற்கொள்ளும் எழுக தமிழ் மக்கள் எழுச்சி பேரணியானது, தமிழ் மக்கள் தமது நிலைப்பாடுகளில் தெளிவாக உள்ளார்கள் என்ற செய்தியினை இலங்கை அரசிற்கும் சர்வதேசத்திற்கும் வலியுறுத்தும் வகையிலான பேரெழுச்சியாக இடம்பெறத் தமிழ் தேசியத்தை நேசிக்கும் மேற்குறித்த கோரிக்கைகள் தமிழர் தேசத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிரானவை எனும் கருத்தில் உடன்படும் அனைத்து தரப்பினரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக முன்றிலில் இருந்து ஆரம்பமாகும் எழுக தமிழ் பேரணியில் கலந்து கொண்டு மக்கள் எழுச்சியினை வலுப்படுத்துவதனூடாக எழுக தமிழ் மக்கள் எழுச்சி பேரணியின் கோரிக்கைகளை வலுவாக ஓங்கிஒலிக்கவலுச்சேர்க்குமாறு உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம். – என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# தேர்தல் காலத்தில் ஊடகங்கள் பொறுப்புடன் நடக்கவேண்டும்

## தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்து

கொழும்பு, செப். 11

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இலத்திரனியல், அச்சு மற்றும் சமூக ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான 3 பேர் கொண்ட ஆணைக்குழு நேற்று சமூக இணைய ஊடகங்கள் மற்றும் முக்கிய செய்தி ஊடக அமைப்புகளின் சுமார் 50 பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியது. இலங்கை பேஸ்புக் வலையமைப்பைக் கண்காணிக்கும் பேஸ்புக் நிறுவனத்தின் இந்திய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ராஜகிரியவிலுள்ள தேர்தல் செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடந்தது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகச் செய்தி மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துபவர்கள், தேர்தல் அட்டவணை அறிவிக்கப்பட்ட காலத்திலிருந்து தேர்தல் முடிவடையும் காலம் வரை பின்பற்றப்படவேண்டிய ஊடக நெறிமுறைகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. கூட்டத்தில் சமூக ஊடக நிறுவனங்களின் சார்பில் சுமார் பன்னிரண்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தேர்தல் பிரசார காலத்திலும், வாக்களிப்பு மற்றும் வாக்கு எண்ணிக்கை காலத்திலும் ஊடகங்கள், குறிப்பாக சமூக ஊடகங்கள் தங்கள் ஊடக உள்ளடக்கங்களில் கவனமாக இருக்கவேண்டிய தன் அவசியத்தை ஆணைய உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

ஊடகத் தலைவர்களிடம் தங்களது சொந்த நெறிமுறைத் தரங்களையும் குறியீடுகளையும் கடைப்பிடிக்கவும், இலங்கைச் சட்டங்களை மீறுவதைத் தவிர்க்கவும் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்தது.

பேஸ்புக் போன்ற சமூக ஊடகங்களால் தேர்தல் சட்டங்கள் மீறப்படுவதற்கான வாய்ப்பைக் குறைக்கும் நோக்கில் ஜனாதிபதித் தேர்தல்களை நடத்துவது தொடர்பாக நாங்கள் தொடர்ச்சியான கூட்டங்களை நடத்த உள்ளோம் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

### திலங்கவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிகளையும் வகிப்பதற்குத் தற்காலிகத் தடை விதித்தார் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ.

முன்னதாக ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தலைவர் பதவிக்கு ஊடக இராஜாங்க அமைச்சர் செய்த நியமனத்தை ஜனாதிபதி தரப்பு தடுத்து கூட்டுத்தாபனத்தைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவந்துள்ள நிலையில் சுதந்திரக் கட்சி எம்.பியான திலங்க சுமதிபால மீது இந்தத் தடையை விதித்துள்ளார் அமைச்சர் ஹரீன்.

இதனால் ஜனாதிபதி – பிரதமர் தரப்புக்கிடையிலான மோதல் மேலும் வலுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகள் பெரும் பீதியில் – அச்சத்தில் – மூழ்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அகில இலங்கை ரீதியில் ஐம்பது வீதமான பஸ் சாரதிகளும் கண்டக்டர்களும் போதை வஸ்துகளுக்கு அடிமையானவர்கள் என்ற அதிரடிக் கருத்தை வெளியிட்டுள்ள அவர், இதனால் பஸ் சேவை வர்த்தகமே பெரும் ஆபத்தை எதிர்கொண்டிருப்பதாக எச்சரிக்கை மணி ஒலித்திருக்கின்றார்.

பஸ் சாரதிகளும், கண்டக்டர்களும் முன்னர் கஞ்சாவைப் பயன்படுத்தினர். இப்போது ‘ஐஸ்’ எனக் கூறப்படும் படிக மெத்தம்பேட்டமைன் என்ற உயர்ரகப் போதை வஸ்தைப் பயன்படுத்துகின்றனராம்.

இந்தத் தகவலையும் அவரே வெளியிட்டார்.

“பயணிகளின் மிச்சக் காசை உரிய முறையில் கொடுக்காமல் ‘டிமிக்கி’ விடுவதன் மூலம் கண்டக்டர்களும், சாரதிகளும் பெரும் தொகையை மேலதிகமாக உழைக்கின்றனர். அப்படிச் சுருட்டும் மேலதிக வருமானம் ஐஸ் போன்ற போதைப்பொருள்களுக்காகச் செலவிடப்படுகின்றது. இந்தப் போதைக்கு அவர்கள் அடிமையாகி விடுகின்றனர்.” – என்றார் அவர்.

முறையான வாகனத் தரிப்பு வசதி, ஓய்வு இடங்கள் இல்லாமை, மிக நெருக்கடியான போக்குவரத்தால் நேரும் அழுத்தம், மோசமான காலநிலை நெருக்குவாரம் போன்றவை போதை வஸ்து மயக்கத்தை நோக்கி சாரதிகளையும், கண்டக்டர்களையும் நெட்டித் தள்ளுகின்றன என்றார் அவர்.

இந்த விவகாரம் தொடர்பில் போக்குவரத்து அமைச்சர், வீதி மற்றும் போக்குவரத்துப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய கவுன்ஸில், பொலிஸ் தலைமையகம் போன்றவற்றுக்கெல்லாம் எழுத்து மூலம் விவரமான தகவல்கள் கடிதங்கள் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் கூறினார்.

எது, எப்படியோ பயணிகள் தங்கள் உயிரைப் பணயம் வைத்துத்தான் இனி பஸ்களில் ஏறவேண்டும் போல... பயணிகள் மட்டுமல்ல, இத்தகைய சாரதிகள் செலுத்தும் பஸ்கள் ஓடுகின்ற பாதைகளில் செல்லும் ஏனையோரின் கதியும் கூட ஆபத்தில்தான்...!

- மின்னல் -

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படும் எனவும் அறிவித்துள்ளனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இடையிலான கலந்துரையாடலொன்று யாழ். சங்கிலியன் பூங்காவில் நேற்று மாலை நடைபெற்றது. இதன்போது பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளமையுடன் புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வடக்கு – கிழக்கில் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அத்தோடு அரசின் காணாமற்போனோருக்கான அலுவலகத் துக்குஎதிர்ப்புத்தெரிவித்தும்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையில் யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடிய காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இதேபோன்றுதொடர்போராட்டத்தை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளனர். அதாவது காணாமலாக்கப்பட்டவர்களுக்காக யாழ்ப்பாணத்தில் ஓர் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. அதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். அந்த அலுவலகம் எங்களுக்குத் தேவையில்லை.

இந்தஅலுவலகத்தைஅகற்றுமாறு கோரி எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மாபெரும் போராட்டமொன்றைமுன்னெடுக்க உள்ளோம். அதனைத்தொடர்ந்து ஏனைய மாவட்டங்களில் கொட்டகை அமைத்து மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்கள் போன்று யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுக்க உள்ளோம்.

ஏனெனில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டத்தை அரசோ எங்கள் பிரதிநிதிகளோ கண்டு கொள்வதில்லை. அதனால் அவர்கள் தேர்தல்களில் வீழ்ச்சிகளையே எதிர்நோக்கி வருகின்றனர். ஆனாலும் உறவுகள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றமை போன்று நாங்களும் இங்கு போராட்டத்தை மேற்கொள்ளத்தீர்மானித்துள்ளோம்.

எங்களால்தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் இப்போது தேர்தல் காலம் என்பதால் தேர்தல் திருவிழாக்களில் உள்ளனர். அவர்கள் எமது பிரச்சினையில் அக்கறை கொள்வதில்லை. எங்களைப் பற்றிக் கிஞ்சித்தும் பார்க்கின்றனர் இல்லை. தங்கள் நலன்களை முன்னிலைப்படுத்தியே அவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் நாம்தான் எமக்காகப் போராடி வருகின்றோம். அதனடிப்படையில் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்திருக்கின்றோம். அரசியல்வாதிகள் எமது போராட்டத்தைக் கண்டு கொள்ளாது விட்டாலும் பொது மக்கள் எமக்கு ஆதரவை வழங்கி வருகின்றனர். அரசியல்வாதிகளின் சுய நலச் செயற்பாடுகளை இன்றைக்குசகலரும் அறிந்து கொண்டுள்ளனர் – என்றனர். (ஐ-07)

## சு.க. தனித்துப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டுக் கொடுப்பும் கிடையாது. சின்னத்தில் மாற்றமில்லையேல் தனித்துப் போட்டியிட முடியும் என்று சுதந்திரக் கட்சியினர் குறிப்பிடுவதால் எதிரணிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைகாரியாலயத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தை நாட்டு மக்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இடம் பெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது எந்நிலையிலும் இந்தச் சின்னத்தில் மாற்றத்தை ஏற்படுத்த மாட்டோம் எனக் கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ, கட்சியின் தவிசாளர் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் உறுதியாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தத் தீர்மானத்தில் தற்போதும் எவ்வித மாற்றங்களும் கிடையாது – என்றார். (ஐ)

## சிறுபான்மைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்னர் அதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார நீக்கம் உட்பட பல விடயங்கள் குறித்து கொள்கை வகுக்கப்படவேண்டும். எல்லாவற்றுக்கும் முன்னர் தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும். வேட்பாளர் யார் என்பதல்ல பிரச்சினை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் குறித்து இறுதி முடிவெடுக்க நேற்று அலரி மாளிகையில் நடந்த கூட்டம் இறுதியாக எந்த முடிவுகளும் இன்றி முடிந்தது.

ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் மட்டுமல்ல, இதர தோழமைக் கட்சிகளின் தலைவர்களுடனும் பேச்சு நடத்தி அதன் பின்னர் கட்சிக்குள்ளும் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி வேட்பாளர் விடயத்தில் தீர்வை காணலாமே தவிர, பொதுக்கூட்டங்களை நடத்தியல்லவென ரணில் நேற்றைய சந்திப்பில் கூறினார் எனத் தெரியவந்தது.

அமைச்சர் சஜித் பிரேமதாஸ தரப்பின் கருத்துக்கள் நேற்றைய கூட்டத்தில் எடுபடவில்லை என்பதால் ரணிலை நம்பியிருப்பது மாற்றுவழி ஒன்றை யோசிக்கும் நிலைமைக்கு சஜித் தரப்பு தள்ளப்பட்டுள்ளதாக நம்பகரமாக அறியமுடிந்தது.

நேற்றைய இந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான சஜித் பிரேமதாஸ, மலிக் சமரவிக்கிரம, ராஜித சேனாரத்ன, ரஞ்சித் மத்தும பண்டார, கபீர் காசிம் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

## பலிதவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உத்தரவை பிறப்பித்தது.

அண்மையில், தோட்டத்தொழிலாளியொருவரின் சடலத்தைப் புதைக்கத் தோட்ட உரிமையாளர் இடம்கொடுக்க மறுத்திருந்தார். சடலத்தைப் புதைக்க நீதிமன்றத்தின் மூலம் தடையுத்தரவும் பெற்றிருந்தார். அதைமீறிச்சடலத்தைப் புதைத்த விவகாரத்திலேயே பாலித விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாலித தேவரப்பெருமவுடன் இணைந்து இறுதிச்சடங்கை நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில்மேலும் நால்வரும் அவருடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## மன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட வியாக்கியானம் கோருவது ஜனாதிபதி பதவிக்கும், அவரது தனிப்பட்ட அரசியலுக்கும் அழகல்ல என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு அறிவித்தல் அதிகாரம்தற்போது தேர்தல் ஆணைக்குழுவுக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளது. தேர்தல் தொடர்பில் எந்நேரத்திலும் சாதகமான தீர்மானங்களே கிடைக்கப் பெறும். ஆனால் ஒரு தரப்பினர் கடந்த காலங்களில் ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொண்டார்கள். அவை யனைத்தும் தற்போது தோல்வியடைந்துள்ளன என அவர் தெரிவித்தார். (ஐ)

## தமிழ் இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் உயிரிழந்துள்ளார்.

அந்த இளைஞன் தங்கியிருந்த அறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் உயிரிழந்தமைக்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆஸ்திரேலியாவில் உள்ள உணவகம் ஒன்றில் அவர் பணியாற்றி வந்துள்ளார். இளைஞனின் மூத்த சகோதரன், அதே பகுதியில் வசித்து வரும் நிலையில் அவரது சடலத்தை அடையாளம் காண பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அந்த இளைஞனின் மரணம் தொடர்பில் ஆஸ்திரேலியப் பொலிஸார் உறுதி செய்துள்ளனர். எனினும் அது தொடர்பான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என உயிரிழந்த இளைஞனின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர் எனக் கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## மரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டு வருகின்றது.

மரண தண்டனை விதிக்கப்படவேண்டுமா, இல்லையா என மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பில், மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு ஆதரவாக 93.77 சதவீதமானோர் வாக்களித்துள்ளனர்.

இந்தக் கண்காட்சி இடம்பெறும் பகுதியில் உருவாக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலக அலுவலகக் கூடத்தில் இந்தக் கருத்துக்கணிப்பு இடம்பெற்று வருகின்றது.

இதற்கான பதிலை 'ரச் ஸ்கிறீன்' (Touch Screen) பயன்படுத்தி வழங்குவதற்குப் பொதுமக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இதில் மரண தண்டனைக்கு எதிர்ப்பு தெரிவித்து 6.23 சதவீதமானோர் வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் 43 வருடங்களில் முதல்முறையாக போதைப்பொருள் தொடர்பான குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

அவரது இந்த அறிவித்தலை அடுத்து அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேசமும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பிக்குகளை தாக்கியவர் கைது!

கொழும்பு, செப். 11

இரண்டு இளம் பிக்குகள் மீது தாக்குதல் நடத்திய ஒருவரை ஹொரவப்பொத்தான பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாக்குதல் தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டிருந்தது. திருட்டுக் குற்றச்சாட்டு சுமத்தி இரண்டு இளம் பிக்குகளையும் அந்த நபர் கடுமையாகத் தாக்கியிருந்தார். (ஐ)



## இலங்கை அணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்ணில் டெஸ்ட் தொடரில் பங்கேற்ற இலங்கை அணி வீரர்கள் சென்ற பஸ் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடந்தது. இதன் பின் சிம்பாப்வே (2015), மேற்கிந்தியத் தீவுகள் (2018) தவிர மற்ற அணிகள் பாகிஸ்தான் சென்று விளையாடவில்லை.

நீண்ட இடைவெளிக்குப்பிறகு செப்ரெம்பர் 27 முதல் ஒக்ரோபர் 9 வரை பாகிஸ்தான் – இலங்கை அணிகள் மோதும் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இந்நிலையில் அணியின் மூத்த வீரர்களான கருணாரத்ன, மலிங்க, மத்தியூஸ் உள்ளிட்ட 10 வீரர்கள் அங்கு பாதுகாப்பு இருக்காது எனக் கூறி பாகிஸ்தான் சென்று விளையாட மறுப்புத் தெரிவித்தனர்.

இதனால் அதிர்ச்சி அடைந்த பாகிஸ்தான் அமைச்சர் ஹம்சா அமீர், இது தொடர்பில் இந்தியாவின் மீது பழி சுமத்தினார்.

இது குறித்து அவர் கூறுகையில் -

பாகிஸ்தான் சென்று விளையாடினால் ஐ.பி.எல்., தொடரில் விளையாட அனுமதிக்க முடியாது என இலங்கை வீரர்களை இந்தியா மிரட்டி இருக்கும். அதனால்தான் அவர்கள் பாகிஸ்தான் வர மறுக்கின்றனர் என்று கூறினார்.

## பெற்றோலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னதாக 92 ஒக்ரைன் பெற்றோல் லீற்றல் ஒன்றுக்கு 2 ரூபாவால் குறைக்கப்படுகிறது என்று நிதி அமைச்சு அறிவித்தது. எனினும் அந்த விலைமாற்றத்தைச் சுமார் ஒரு மணி நேரத்தின் பின் ஒரு ரூபாவால் அதிகரித்து நிதியமைச்சு மீள அறிவித்துள்ளது.

முன்னதாக இரவு 7 மணிக்கு வெளியிடப்பட்ட விலைப்பட்டியலின் படி 92 ஒக்ரைன் பெற்றோலின் புதிய விலை 137 ரூபாவாகவும் 95 ஒக்ரைன் பெற்றோலின் விலை 161 ரூபாவாகவும் சுப்பர் டீசலின் விலை 132 ரூபாவாகவும் ஓட்டோ டீசலின் விலை 104 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இரு தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குயின் வீதி மற்றும் ஸ்பெடினா அவனியூ பகுதியில் அமைந்துள்ள துரித உணவகத்தில் 34 வயது ஆண் ஒருவர் வரிசையில் காத்துக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த இருவர் அந்த நபருடனும் வரிசையில் காத்திருந்த பிறிதொருவருடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, வெளியே இருந்து வந்த இருவரில் ஒருவர் தனது மேற்சட்டையை உயர்த்தி மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியைக் காண்பித்து எச்சரித்துள்ளார்.

மோதல் தீவிரமடைந்தபோது, ஒருவர் அடித்து நிலத்தில் வீழ்த்தப்பட்டார் எனவும், இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு அஞ்சி அங்கிருந்து தப்பியோடியனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களைத் துரத்திச் சென்ற சந்தேக நபர்கள், தப்பியோடியோர் மீது துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்தியுள்ளனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், அந்தப் பகுதி ஒழுங்கை ஒன்றினூடாக ஒழிக்கொண்டிருந்த சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்தமையுடன் இரண்டு கைத்துப்பாக்கிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒஷாவா பகுதியைச் சேர்ந்த 27 வயதான ஜேய்சன் ஜெயகாந்தன் மற்றும் மிசிசாகாவைச் சேர்ந்த 26 வயதான ஜோன்சன் ஜெயகாந்தன் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஜேய்சன் ஜெயகாந்தன் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பாக ரொறன்ரோ பொலிஸாரால் ஆபத்தான நபராக அறிவிக்கப்பட்டு தேடப்பட்டு வந்தவர் ஆவார். (ஐ)

## நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டெனீஸ்வரன் தாக்கல் செய்த வழக்கின் மீது எதிர்வரும் நவம்பர் 18, 19, 21 ஆகிய மூன்று தினங்களிலும் தொடர்ச்சியாக விசாரணை செய்து, வழக்கை முடிப்பதற்குக் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்தது.

தம்மை அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றிய முறைமை சட்ட விரோதமானது என்பதால் தாம் தொடர்ந்து அமைச்சர் பதவியில் தொடர அனுமதிக்கும்படி கோரி டெனீஸ்வரன் தாக்கல் செய்த வழக்கை விசாரணைக்கு ஏற்ற மேன்முறையீட்டு நீதிமன்றம் அந்த வழக்கு மீதான விசாரணை முடிவடையும் வரை டெனீஸ்வரனை அமைச்சர் பதவியில் தொடர்வதற்கு இடையூறு விளைவிக்காமல் அனுமதிக்கும்படி இடைக்கால உத்தரவு ஒன்றை விடுத்திருந்தது.

ஆனால், அந்த உத்தரவை நடைமுறைப்படுத்தத்தவறியமை மூலம் அப்போது முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன் நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றமிழைத்துள்ளார் என மற்றொரு வழக்கை டெனீஸ்வரன் பின்னர் தாக்கல் செய்திருந்தார்.

மூலவழக்கில், டெனீஸ்வரனை பதவி விலக்கியமை சட்ட விரோதமானது எனத் தீர்ப்பளித்துள்ள நீதிமன்றம், அதை ஒட்டிய நீதிமன்றின் இடைக்கால உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறியமை மூலம் நீதிமன்றத்தை முதலமைச்சர் அவமதித்துள்ளார் என்ற குற்றச்சாட்டுக் குறித்தே நவம்பரில் அடுத்தடுத்து மூன்று தினங்களில் விசாரணை நடத்தித் தீர்ப்பளிக்க விருக்கின்றது.

நேற்று இந்த வழக்கு இரண்டு நீதியரசர்கள் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற ஆயத்தின் முன் எடுக்கப்பட்டபோது விசாரணைத் திகதி தீர்மானிக்கப்பட்டது. (உ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## முத்தையாவும் விநாயகமூர்த்தியும்

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை என முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

என்னவோ முரளிதரன் என்ற பெயரில் உருவெடுத்த பிரமுகர்கள் பலரும் கோடரிக்காம்பாக மாறும் அனர்த்த நிலையே துரதிஷ்டவசமாக இங்கு உள்ளது.

முத்தையா முரளிதரனும், விநாயகமூர்த்தி முரளிதரனும் ஒரே நேர் கோட்டில்தான் சிந்திக்கின்றார்கள் போலும்.

கருணா என்ற முரளிதரன் கூறியிருக்கின்றமை போல தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் மக்களுக்கு உருப்படியாக எதையும் செய்யவில்லைத்தான்.

எதையும் செய்யவில்லை என்பது நல்லவற்றையும் செய்யவில்லை, தீயவற்றையும் செய்யவில்லை எனவும் அர்த்தம் தரும்.

மைத்திரியும், ரணிலும் தமிழர்களுக்கு நல்லவற்றைச் செய்யவில்லை என்பது ஒரு புறம் இருக்க, கருணாவின் இப்போதைய தலைவர்களான மஹிந்த ராஜபக்ஷவும், கோட்டாபய ராஜபக்ஷவும் தமிழர்களுக்குச் செய்த பேரழிவு, நாச வேலைகள் அளவுக்கு எதையும் செய்யவில்லை என்பதும் உண்மைதான்; வாஸ்தவம்தான்.

இந்த இரண்டு முரளிதரன்களும் ஒரு காலத்தில் தமிழர்களினால் ஏற்றிப் புகழப்பட்டனர் – ஒருவர் போர்க்களத்திலும் மற்றவர் கிரிக்கெட் களத்திலும் வீரர்களாகத் திகழ்ந்த போது.

தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலில் ஏனைய மறப்படைத் தளபதிகளுடன் சேர்ந்து வீரம் செறிந்த போராட்டத்தை விநாயகமூர்த்தி முரளிதரன் வெளிப்படுத்தியபோது அவரை கருணா அம்மானாகப் போற்றிப் பெருமைப்பட்டது தமிழினம்.

அதேபோன்று கிரிக்கெட் ஆடுதிடலிலே உலகப் புகழ்பெற்ற சுழல் பந்துவீச்சாளனாக முத்தையா முரளிதரன் ஜொலித்த போது சகோதரத் தமிழனுக்குக் கிடைத்த உலகப் பெருமையாக அதைக் கொண்டாடியது தமிழினம்.

இன்று தங்களின் அருவருக்கத்தக்க செயற்போக்கினால் தமிழர்கள் மனதில் குறுகிப் போயிருக்கின்றார்கள் இரு முரளிதரன்களும்.

பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரனாவது ஓரளவுக்குத் தேவலை எனலாம்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் ஆழம், பின்னணி, அதன் நியாயம், அதற்குள் புதைந்து கிடக்கும் சத்தியம், உண்மை பற்றிய புரிதல் ஏதும் அற்றவர் அவர். அப்படிப்பட்டவரின் பார்வை விடுதலைப் போராட்டம் தொடர்பில் – அதன் நியாயங்கள் தொடர்பில் – அப்படிக் குறுகியதாகத் தான் இருக்கும்.

நிதியையும், சொத்தையும், வருமானத்தையும் மட்டும் கணக்கிடும் ஒரு பாரம்பரியத்தில் வந்த வர்த்தகக் குடும்ப வாரிசான அவருக்கு, இனக் கலவரத்தால் ஏற்பட்ட வடுக்கள், இழப்புகள் வெறும் நாணயப் பெறுமதியில் அளவிடுவனவாகவே இருந்திருக்கும். அதற்குப் பின்னால் புதையுண்டு அழுந்திப் போய்க் கிடக்கும் இனத்தின் ஆன்மாவின் உயிர் வலியும், அதை மீட்டெடுக்க வேண்டிய சத்தியக் கடப்பாடு தான் உட்பட ஒவ்வொரு தமிழனுக்கும் இருப்பதும் அவருக்கு புரியாது.

அதனால் இழப்புகளை நிதிப் பெறுமானம் போன்று அளவிட்டு அதனடிப்படையில் அவர் பேசுகின்றார். பேரினவாதத்திடம் சிறுபான்மைத் தரப்பு. இனச் சரணாகதி அடைந்தால், அதன் மூலம் தேவையான நிதி வருமானம் கிட்டுமானால், அதுவே வெற்றி வர்த்தகம் என்று மகிழ்ந்து அடங்கிப் போகும் மூன்றாம் தர வியாபார மனப்பான்மை கொண்டவர்கள் அவர்கள். அப்படித்தான் பேசுவார்கள். அது பற்றி நாம் அலட்டிக் கொள்வதில் அர்த்தமில்லை.

ஆனால், விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) அப்படிச் சிந்திக்கவே கூடாதவர். ஆனால் அதையும் தாண்டிக் கேவலமாகச் செயற்பட்டவர்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் நீண்ட, நெருக்கடிக் நிறைந்த வரலாற்றை, தனித்துவத்தை, புரட்சிகரப் போக்கை நன்கு புரிந்தவர் அவர்.

தமிழர்களுக்கு எதிரான சிங்களப் பேரினவாத அரச ஒடுக்குமுறையின் ஆழத்தையும், குரூரப் பரிமாணத்தையும், கொடூரப் போக்கையும், இனவாதப் பண்பியல்புகளையும் நேரில் பட்டறிந்து நன்கு உணர்ந்தவர் அவர்.

அத்தகைய கொடூரத்துக்கு எதிரான தமிழர்களின் சத்திய எழுச்சியைக் காட்டிக் கொடுத்துத் காக்கை வன்னியனாகி, அந்தப் போராட்டத்தையே மழுங்கடித்த கோடரிக் காம்பு அவர்.

தான் விலைபோன, பேரினவாத எஜமானர்களான ராஜபக்ஷக்களுக்காக அவர் அரசியல் பிதற்றல்களைப் பேசுவது ஒன்றும் புதுமையல்ல. காட்டிக் கொடுத்தவர்கள் அப்படித்தான் பேசமுடியும்.

# தமிழ்த் தேசியத்தின் குரலை ஓங்கச் செய்ய ‘எழுக தமிழ்’ பேரணி பலமடைய வேண்டும்

## மு .திருநாவுக்கரசு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 11

தமிழ் தேசியத்தின் குரலை உள்நாட்டிலும் உலக அரங்கிலும் உரத்து ஓங்கச் செய்யவும் அவர்களின் இருப்பையும் உரிமைகளையும் உறுதிப்படுத்தவும் எழுக தமிழ் பேரணி வெற்றிகரமானதாக அமைய வேண்டியது அவசியம். இப்பேரணி பிசுபிசுத்துப் போனால் அது தமிழின எதிரிகளுக்கு பெரும் வாய்ப்பாகவும், ஈழத் தமிழினம் இருந்த அடையாளமே இல்லாது அழிந்து போவதற்கான ஒரு முன்னறிவிப்பாகம் அமைந்துவிடும். ஆதலால் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், அரசியல் போட்டிகள், கட்சி பேதங்கள் என்பனவற்றையெல்லாம் கடந்து இந்த ” எழுக தமிழ்”' பேரணியை வெற்றிகரமானதாக ஆக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனினது கடமையும் பொறுப்புமாகும்.

– இவ்வாறு அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

நான் பெரிது நீ பெரிது என்று போட்டி போட்டுக் கொண்டிருக்காமல் எனக்கா உனக்கா முதல் பங்கு என்று சண்டையிட்டுக் கொண்டிருக்காமல் தமிழ் மக்களின் தேசிய இருப்பை நிலைநாட்ட வல்ல அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் ஆதரிக்கவும் பலப்படுத்தவும் வேண்டும்.

“மன்னாதி மன்னர் எங்கே
மாமணித் துரோனர் எங்கே
என்னுடன் தம்பி எங்கே
இலக்கணகுமாரன் எங்கே
கர்ணனும் தேரும் எங்கே
கரைகொளாச் சேனை எங்கே”

என்று பதினெட்டாம் நாள் போர் முடிவில் துரியோதனன் கதறிய நிலையில் ஈழத் தமிழர்கள் இன்று நிற்கின்றோம்.

2009ஆம் ஆண்டு உலகில் காணப்பட்ட சுமாராக 700 கோடி மக்களின் கண்களின் முன் கேட்பாரின்றி அநாதரவான நிலையில் சுமாராக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ஈழத்தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகினர்.

1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் மூத்த பெரும் தமிழ் தலைவர்கள் விடுத்த அழைப்பை ஏற்று தமிழ் தாயின் தலைப் பேறுகளான புதல்வர்களும் புதல்விகளும் கூடவே தமிழ்மக்களும் போர்க்களம் புகுந்தனர்.

கரிபால்டி அழைக்கின்றார் இளைஞர்களே எழுங்கள் என்று 1977ஆம் ஆண்டு தேர்தல் மேடைகளில் முழங்கிய பிரசாரப் பீரங்கிகள் இன்று தமிழ் மக்களின் முன்னணி தலைவர்களாய் தேரோடும் வீதியிலே சிங்கள இராணுவத்தின் அரவணைப்போடு அகலக் கைவீசிப் பவனி வருகின்றார்கள்.

முள்ளிவாய்க்கால் இரத்தத்தில் தோணிகள் ஓட்டி விளையாடி தலைவர்களாய் முள்ளிவாய்க்கால் எலும்புக்கூடுகள் நமக்கு மாளிகை கட்டி மகிழ்ந்து வாழும் தலைவர்களாய் இன்றைய முன்னணி தமிழ் தலைவர்கள் காணப்படுகிறார்கள்.

கரிபால்டி அழைக்கிறார் இளைஞர்களே எழுக என்றும் வங்கத்துச் சிங்கங்கள் எழுக என்றும் 1970களின் மத்தியில் பேசிய மேடைப் பேச்சு வீரத் தமிழ் தலைவர்களின் வீராவேசப் பேச்சின் பின்னணியில் இளைஞர்களும் யுவதிகளும் உடல் – பொருள் – ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து போராட புறப்பட்டனர்.

சம உடைமைத் தன்னாட்சி தமிழீழ விடுதலைக்காக எனது உள்ளம், உயிர், உடல், உடைமை அனைத்தையும் ஈர்ந்து உறுதியோடு போராடுவேன் என்று. சத்தியம் செய்து போர்க்களம் புகுந்து ஆகுதியான இளைஞர் யுவதிகளின் அர்ப்பணிப்புகளும் வரலாறும் கண்முன் விரிந்து கிடக்கின்ற–.

அப்படியே ஆகுதியான அனைத்துப் போராளிகளையும் மக்களையும் நலன் விரும்பிகளையும் கணமுன் கண்ட பின்பும் ஓடுகாலி அரசியலுக்கு குறைவின்றி தமிழ் மக்களின் வரலாறு துயரகரமாய் நீண்டு செல்கிறது.

வன விலங்கியல் வாழ்வில் தலையாய வேட்டை விலங்குகள் , மிச்சம் உண்ணி வேட்டை விலங்குகள் , காட்டிக்கொடுக்கும் மற்றும் ஒற்றர் வேலை செய்யும் பறவைகள் என பலமாக வகைப்படுத்துவர்.

உதாரணமாக சிங்கம் மற்றும் புலியினங்கள் என்பன தலையாய வேட்டை விலங்குகள் ஆகும். இவை வேட்டையாடிய மிச்சங்களை உண்ணும் மிச்சமுண்ணி விலங்குகளாக கழுதைப் புலிகள் , ஓநாய்கள் , காட்டு நாய்கள், நரிகள் என்பன காணப்படுகின்றன.

கழுகுகள் ,வல்லூறுகள், பருந்துகள் மற்றும் இவற்றையொத்த பறவையினங்கள் என்பன வேட்டையாடப்பட்ட பிராணிகளை இறந்துபோன பிராணிகளை ஏனைய பிராணிகளுக்கு காட்டிக் கொடுக்கும் வகையில் தகவல் வழங்கவல்ல பிராணிகளாக காணப்படுகின்றன.

மிச்சமுண்ணி விலங்குகள்விட்ட சிதலங்களை கழுகுகளும், வல்லூறுகளும் , பருந்துகளும் கொத்தி உண்ணும். இந்த மிச்சமுண்ணி பறவைகள்விட்ட துகள்களை வண்டுகளும், பூச்சிகளும் உண்ணும்.

இத்தகைய காட்டு விலங்கு வாழ்விலிருந்து நாட்டு அரசியல் அதிகம் வேறுபட்டதல்ல. ஈழத் தமிழினம் மேற்படி தலையாய வேட்டை விலங்கு அரசியல் மிச்சம் உண்ணி விலங்கு அரசியல் காட்டிக்கொடுக்கும் பறவையின அரசியலெனப் பல்வேறு மூர்க்கமான அரசியல் வலைப்பின்னலுள் சிக்குண்டு தவிக்கின்றது.

இத்தகைய சூழலில் ஈழத் தமிழ் தாயின் புதல்வர்கள் முன்னும் புதல்விகள் முன்னும் விரிந்து கிடக்கும் பணிகள் மிகவும் கடினமானவை. தமிழ் மக்களின் எதிர்காலம் மேற்படி காட்டு விலங்கு வகை தலைவர்களின் அரசியலிலிருந்து தமிழ் மக்களை தற்காத்து முன்னேறுவதற்கும், தமிழ் மக்களுக்கான இறுதி இலக்கை அடைவதற்கும், அதிக புத்திசாலித்தனமும், அதிக அர்ப்பணிப்பும் , அனைவரையும் அரவணைக்கும் பரந்த மனப்பாங்கும், யதார்த்த பூர்வமான உலகக் கண்ணோட்டமும், சாதுரியமான வெளியுறவுக்கொள்கையும் அவசியம்.

இதற்கான சரியான புதிய பாதை கொண்ட ஒரு மாற்று தலைமைத்துவம் இன்றி தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்க முடியாது.

துணை அழிவுகளுக்கும், இழப்புகளுக்கும் பின்பு தமிழ் மக்கள் நீதிக்காகவும் சமாதான பூர்வமான அரசியல் திர்வுக்காகவும் சர்வதேச அரசுகளிடம் சிங்களத் தலைவர்களிடமும் தமிழ் தலைவர்களிடமும் நம்பிக்கை வைத்து காத்து நின்றனர்.

ஆனால் மேற்படி உள்நாட்டு, வெளிநாட்டுத் தரப்புகளினால் நம்பிக்கை ஊட்டப்பட்ட , வாக்குறுதி அளிக்கப்பட்ட நல்லாட்சி அரசின் பெறுபேறுகள் என்பன இனப்படுகொலையாளிகளைப் பாதுகாப்பதிலும், இனப்படுகொலை அரசை காப்பாற்றுவதிலும் ஒருபுறம் வெற்றி பெற்றதுடன் மறுபுறம் தமிழ் தமிழ் மக்கள் வேண்டி நின்ற நீதியான நியாயமான அரசியல் தீர்வை நிராகரித்துள்ளதுடன் தமிழ் மண்ணை சிங்களக் குடியேற்றங்களால் மேலும் ஆக்கிரமிப்பதிலும், தமிழ் மண்ணை பெரிதும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு உட்படுத்துவதிலும் முன்னேறியுள்ளது.

இத்தகைய சூழலில் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பானது சிங்கள ஆட்சியாளர்களின் உற்ற நண்பர்களாக இருக்கும் நிலையில், அவர்களின் கூடைக்குள் இவர்களும் ஒரு பகுதியாக இணைந்து கொண்ட நிலையில் தமிழ் மக்கள் தன்னெமுச்சி கொண்டு ஒரு புதிய பாதையில், ஜனநாயக வழியில் போராட வேண்டிய கடமையும் பொறுப்பும் உள்ளவர்களாய் காணப்படுகின்றனர்.

மேற்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் திசைமாறிய அரசியலுக்குப் பதிலாக ஒரு புதிய மாற்று அரசியல் தலைமையை உருவாக்க மாற்றுத் தலைமை பேசும் தமிழ் அரசியல் தலைவர்கள் புறப்பட்டனர் அதன்பொருட்டு தமிழ் மக்கள் பேரவை என்ற ஒரு மக்கள் போராட்ட அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனாலும் அது தனக்குள் மோதிக்கொள்ள நிலைமையில் வீரியமிக்க காணப்படுகிறது.

(09 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை** 12.09.2019 வியாழக்கிழமை

நட்சத்திரம்: அவிட்டம் மு.இ 6.43 வரை
திதி : திரயோதசி கா. 6.17 வரை
இராகுகாலம் : 1.33 – 3.03
சுப நேரம் : 7.33 – 9.03

நடேஸ்வர அபிஷேகம்

# எழுக தமிழ் - 2019

## செப்ரெம்பர் -16 முற்றவெளி நோக்கி

- ★ சிங்கள, பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்து
- ★ சர்வதேச போர்க்குற்ற விசாரணையை நடத்து
- ★ தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்
- ★ வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உடனடி விசாரணை நடத்து
- ★ வடக்கு-கிழக்கில் இராணுவ மயமாக்கலை நிறுத்து
- ★ இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களது பாரம்பரிய இடங்களில் மீளக்குடியமர்த்து என்ற கோசங்களுடன் எழுக தமிழாய் அணிதிரள்வோம் வாரீர்!

இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டமே. எழுக தமிழாய் எழுவோம் வாரீர்!!




முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நிகழ்த்திய அகந்தையோடு சிங்கள பௌத்த விரிவாக்கமானது முன்னெப்போதும் இல்லாதளவில் முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழ்மண்சிதைவுற்று,தமிழரின் குடித்தொகை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது.வடக்கில்இருந்து கிழக்கைப் பிரித்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.தோற்கடிக்கப்பட்ட மக்கள்என்ற மனநிலையுடன்தமிழ் மண் அரசியற் சகதிக்குள் மூழ்கியுள்ளது.

தமிழ் மக்கள் எதிரியின் காலடியில் சிக்குண்டு கிடக்கின்றனர். நம்பிக்கையற்ற நடை பிணங்களாய் ஈழத்தமிழ் மக்கள் அரசியற் பாலைவனத்தில் தள்ளப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் தமது உரிமைக்கான போராட்டங்களை ஆரம்பித்த காலத்தை விடவும், அதற்கான தேவையும், பரப்பும், நியாயமும் இன்று மிகப் பெரியதாகியுள்ளன.

சர்வதேசத்தின் முன் நாம் வைத்த கோரிக்கைகளும் புவிசரர் அரசியலில் பந்தாடப்படுகின்றன. நம்பிக்கை இழந்த எம்மக்கள் தாமே தலைமையேற்று போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஒருங்கிணைத்து வலுப்படுத்த எழுக தமிழாய் அணிதிரள்வோம்.

மேலதிக தகவல்களுக்கும், தொடர்புகளுக்கும்:
தமிழ் மக்கள் பேரவை,
61, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

எம் மக்களின் கோரிக்கைகளை முன்நிறுத்தி தேசமாய் அணி திரள்வோம்!!

# தமிழ் மக்கள் பேரவை

www.elukathamil.com  info@elukathamil.com  tamilpeoplescouncil  0760025080

காலைக்கதிர் Kalaikathir



# பிளாஸ்ரிக் பொருள்களுக்கு உலகம் விடை கொடுக்கும் நேரம் வந்துள்ளது

## ஐ.நா. மாநாட்டில் பிரதமர் மோடி தெரிவிப்பு

புதுடில்லி, செப். 11

ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் பொருளுக்கு உலகம் விடை கொடுக்கும் நேரம் வந்து விட்டது என்று ஐ.நா. மாநாட்டில் பிரதமர் மோடி பேசினார்.


பாலைவனமாக்கலுக்கு எதிரான ஐ.நா. மாநாடு, டில்லி அருகே உள்ள நொய்டாவில் நடந்து வருகிறது. 197 நாடுகளின் பிரதிநிதிகள், இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். 13 ஆம் திகதி வரை இம்மாநாடு நடைபெறும்.

நேற்றுமுன்தினம் இந்த மாநாட்டில், பிரதமர் மோடி பங்கேற்று பேசினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

பருவநிலை மாறுபாடு என்பது நிலத்தின் சிதைவுக்கு வழிவகுக்கிறது. கடல் மட்டம் உயர்வு, கடல் சீற்றம், தவறிய மழைப்பொழிவு, புயல், புழுதி புயல் போன்ற காரணங்களாலும் நிலம் சிதைகிறது. உலகில் மூன்றில் இரண்டு பங்கு நாடுகள், நிலச் சிதைவால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தியா, 2030 ஆம் ஆண்டுக்குள் 21 மில்லியன் ஹெக்டேயர் சிதைந்த நிலங்களை பயன்பாட்டுக்கு கொண்டு வர இலக்கு நிர்ணயித்து இருந்தது. இந்த இலக்கை 26 மில்லியன் ஹெக்டேயர் நிலங்களாக உயர்த்த திட்டமிட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.



இந்தியாவின் மரங்கள் மற்றும் வனப்பரப்பு, கடந்த 2 ஆண்டுகளில், 0.8 மில்லியன் ஹெக்டேர் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் கழிவுகளால் நிலம் வீணாகிறது. இதை கவனிக்காமல் போனால், நிலம் மலடாக மாறுவதுடன், விவசாயத்துக்கு பயனற்றதாகி விடும். ஆகவே, ஒருமுறை மட்டும் பயன்படுத்தத்தக்க பிளாஸ்ரிக் பொருள்களுக்கு இந்தியா தடை விதித்துள்ளது. எதிர்வரும் ஆண்டுகளில், அதற்கு முற்றுப் புள்ளி வைப்போம்.

அதுபோல், ஒருமுறை மட்டும் பயன்படுத்தத்தக்க பிளாஸ்டிக் பொருள்களுக்கு உலகமும் தடை விதிக்கும் நேரம் வந்து விட்டது. பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரித்து, அப்புறப்படுத்த இந்தியாவில் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சிதைந்த நிலங்களுக்கு தீர்வு காணும் போது, தண்ணீர் பற்றாக்குறைக்கும் தீர்வு காணப்பட வேண்டும். தண்ணீர் விநியோகத்தை பெருக்கவேண்டும். நிலத்தில் ஈரப்பதம் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு நீர் மேலாண்மையில் உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும்.

உலகளாவிய தண்ணீர் செயல் திட்டத்தை உருவாக்க வேண்டும். இந்தியாவில், நீர் மேலாண்மைக்காக 'ஜலசக்தி' அமைச்சகம் தொடங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் வருவாயை இரண்டு மடங்காக்க திட்டம் வகுத்துள்ளோம். 21 கோடிக்கு மேற்பட்ட மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. பூச்சிக் கொல்லி உரங்களைத் தவிர்த்து விட்டு, பசுமை உரங்கள் பயன்பாட்டை அதிகரித்து வருகிறோம்– என்றார்.

# விக்ரம் லாண்டருடன் தொடர்பை ஏற்படுத்த முயற்சி முன்னெடுப்பு!

## இஸ்ரோ ஆய்வு மையம் தெரிவிப்பு

விக்ரம் லாண்டருடன் தகவல் தொடர்பை ஏற்படுத்த அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவை பற்றி ஆய்வு செய்வதற்காக ஒபிட்டர், விக்ரம் லாண்டர், பிரக்யான் ரோவர் ஆகிய 3 பகுதிகளை உள்ளடக்கிய சந்திரயான்2 விண்கலத்தை இஸ்ரோ (இந்திய விண்வெளி ஆய்வு மையம்) கடந்த ஜூன் 22 ஆம் திகதி ரொக்கெட் மூலம் விண்ணுக்கு அனுப்பியது. ஒபிட்டரில் இருந்து பிரிந்து, சந்திரனில் இருந்து 35 கி.மீ. உயரத்தில் சுற்றி வந்த விக்ரம் லாண்டர் கடந்த சனிக்கிழமை அதிகாலை நிலவில் தரை இறங்க முயன்றது.



கீழ் நோக்கி வந்து கொண்டிருந்த விக்ரம்லாண்டர் நிலவில் இருந்து 2.1 கிலோ மீற்றர் உயரத்தில் இருந்த போது, அதற்கும் பெங்களூருவில் உள்ள இஸ்ரோ தரை கட்டுப்பாட்டு நிலையத்துக்கும் இடையேயான தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

விக்ரம் லாண்டரின் கதி என்ன ஆனது என்று தெரியாததால் அதை கண்டுபிடிக்கும் முயற்சியிலும், அதனுடன் தொடர்பை ஏற்படுத்தும் முயற்சியிலும் விஞ்ஞானிகள் மும்முரமாக ஈடுட்டு வருகின்றனர். நிலவை சுற்றி வரும் ஒபிட்டர் எடுத்து அனுப்பிய தெர்மல் இமேஜ் மூலம் விக்ரம் லாண்டர் சேதம் அடையாமலும் ஒரு பக்கமாக சாய்வாக இருப்பதும் கண்டறியப்பட்டது.

இந்தநிலையில், நேற்றுக்காலை இஸ்ரோ வெளியிட்டுள்ள செய்தியில், சந்திரயான் 2 ஒபிட்டர் மூலம் விக்ரம் லாண்டர் கண்டறியப்பட்டது. எனினும், தற்போது வரை விக்ரம் லாண்டருடனான தகவல் தொடர்பு கிடைக்கவில்லை. விக்ரம் லாண்டருடனான தகவல் தொடர்பை மீட்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஜம்முகாஷ்மீர் மாணவர்கள் சாலை மறியல் போராட்டம்

உதாம்பூர், செப். 11

ஜம்மு காஷ்மீரின் உதாம்பூர் பகுதியில் பாடசாலை மாணவர்கள் பாடசாலையில் போதிய ஆசிரியர்கள் இல்லை எனக் கூறிச் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜம்மு காஷ்மீரில் உள்ள சம்ரோலி பகுதி வழியாகச் செல்லும் ஜம்மு ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையை மறித்து மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நூற்றுக்கணக்கான மாணவர்களுடன் அவர்களது பெற்றோர்களும் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர். பள்ளியில் போதிய ஆசிரியர்கள் இல்லை எனக்கூறிய மாணவர்கள் சாலையில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டமையால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவரான கயே சிங் இப் போராட்டம் பற்றி தெரிவித்ததாவது:–

எங்கள் பள்ளியில் 16 ஆசிரியர்கள் தேவை என்ற நிலையில், வெறும் 3 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். அனைத்து வகுப்புக்கும் பாடம் கற்பிக்கும் வகையில் ஆசிரியர்கள் இல்லாததால், எங்களின் கல்வித்தரம் பாதிக்கப்பட்டுள்ளது. உயர் அதிகாரிகளிடம் பல முறை எடுத்துச்சென்ற போதிலும், அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றார்.

கல்வித்துறை கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் முழக்கத்தில் ஈடுபட்டனர். எங்களின் தேவைகள் பூர்த்தி ஆகும் வரை நாங்கள் போராட்டத்தை கைவிடமாட்டோம் என்று மாணவர்கள் தெரிவித்தனர்.


# டிரக்கைத் தூக்கிக் கவிழ்த்து அட்டகாசம் போட்ட யானை!

புதுடில்லி, செப். 11

மேற்கு வங்கத்தில் சாலையில் நடந்து சென்ற காட்டு யானை தனது வழியில் குறுக்காக நின்ற டிரக் ஒன்றை கவிழ்த்துப் போட்டது. ஜார்கிராம் பகுதியில் உள்ள கர்சால்போனி என்ற இடத்தில் வனப்பகுதியில் இருந்து வெளியேறிய ஆண் யானை ஒன்று அருகில் இருந்த சாலையில் நடந்து சென்றது.

இதனைக் கண்ட வாகன ஓட்டுநர்கள் ஆங்காங்கே தங்கள் வாகனங்களை நிறுத்திவைத்திருந்தனர். அப்போது சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த டிரக் ஒன்றைக் கண்ட அந்த யானை திடீரென டிரக்கை தூக்கிப் பக்கவாட்டில் கவிழ்த்துப் போட்டது.

இதனைக் கண்ட பொதுமக்கள் அலறினர். இந்த நிகழ்வில் டிரக்கில் இருந்த ஓட்டுநர் லேசான காயமடைந்தார். அதன் பின்னர் எதுவும் நடக்காதது போல் சாவகாசமாக நடந்து சென்றது அந்த யானை.



# மலையக வசூல் ராஜாக்களுக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளேன்!

## அமைச்சர் திகாம்பரம் பெருமிதம்

**கொழும்பு, செப். 11**
**நான் பாடசாலைகளுக்கு தேவையான நிதிகளை ஒதுக்கிக் கொடுப்பதில் பின்வாங்கியதில்லை. ஹற்றன் கல்வி வலயத்தைச் சேர்ந்த போடைஸ் த.ம.வி., கில்லார்னி த,ம.வி. கவரவில த.ம.வி., பொஸ்கோ கல்லூரி ஆகியவற்றுக்குக் கோடிக் கணக்கான நிதியை ஒதுக்கிக் கொடுத்திருந்தேன். ஆனால், மாகாண அதிகாரத்தை வைத்துக் கொண்டு அந்த நிதியைப் பயன்படுத்த முடியாமல் செய்து விட்டார்கள். அதிபர், ஆசிரியர்களைப் பயமுறுத்திய காரணத்தால் அவர்களும் பயந்து விட்டார்கள். திகாம்பரம் பாடசாலைகளுக்குச் செல்வது சிலருக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான பி. திகாம்பரம் தெரிவித்தார்.**



கல்வியமைச்சின் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத் திட்டத்தின் கீழ் நானுஓயா நாவலர் கல்லூரியில் 60 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நான்கு வகுப்பறைகளைக் கொண்ட ஆரம்ப பிரிவுக்கான வளநிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இன்று இந்தப் பாடசாலைக்கு கணனிகள் தேவை என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. விரைவில் 3 கணனிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன். அதேபோல், தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நுவரெலியா மாவட்டத்தில் தேசிய பாடசாலைகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொண்டபோது சில அரசியல்வாதிகள் அதிபர்களிடம் எழுதி வாங்கிக் கொண்டு தேசியப் பாடசாலைகள் தேவை இல்லை என்று கூறி விட்டார்கள். அவ்வாறு தேசிய பாடசாலைகள் கிடைத்திருந்தால் நாம் மாகாண அமைச்சை எதிர்நோக்காமல் மத்திய அரசின் உதவியை நேரடியாகப் பெற்றுக் கொள்ளக் கூடிதாக இருந்திருக்கும். அவ்வாறு தேசியப் பாடசாலை தேவையில்லை என்று கூறிய அதிபர்கள் ஓய்வு பெற்று விட்டாலும் அவர்கள் சமூகத்துக்கு துரோகம் செய்தவர்களாகவே இருக்கின்றார்கள். ஹைலண்ட்ஸ் கல்லூரி போன்றவற்றில் சிறந்த பெறுபேறுகள் கிடைப்பது சாதனை அல்ல. இத்தகைய பின்தங்கிய பாடசாலைகளில் கிடைக்கும் பெறுபேறுகள் தான் உண்மையான சாதனை ஆகும்.

நான் சமூகம் சார்ந்த அரசியலையே முன்னெடுத்து வருகின்றேன். எமது மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் தனி வீட்டுத் திட்டம், அதற்கான காணி அவற்றுக்கான உறுதிப் பத்திரங்கள், பிரதேச சபைகள் அதிகரிப்பு, பிரதேச செயலகங்கள், மலையகத்துக்கான தனியான அபிவிருத்தி அதிகார சபை என பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வந்தாலும் என்மீது விமர்சனம் செய்கின்றவர்கள் இல்லாமல் இல்லை. எனினும் அவற்றை ஒரு பொருட்டாகக் கொள்ளாமல் எனது சேவைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றேன்.

ஆசிரிய சமூகம் தன்மானம் மிக்க சமூகமாக திகழ வேண்டும். அவர்கள் பின்னால் அரசியல்வாதிகள் வர வேண்டுமேயொழிய அரசியல்வாதிகள் பின்னால் படித்தவர்கள் செல்லக் கூடாது. கண்டவர்களுக்கு எல்லாம் சேர் பட்டம் கொடுத்து தமது மதிப்பை குறைத்துக் கொள்ளக் கூடாது. அதிபர், ஆசிரியர்களை அரசியல்வாதிகள் தேடி வருகின்ற நிலைமையை உருவாக்க வேண்டும். அந்தப் பொறுப்பை தகுந்த முறையில் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

இந்திய அரசு 40 பஸ்களை கொடுத்திருந்தது. எமது மாணவர்களின் நலன் கருதி வழங்கப்பட்ட பஸ்களுக்கு என்ன நேர்ந்தது என்று தெரியவில்லை. அவற்றை விற்று விட்டனர் எனக் கூறப்படுகின்றது. இந்திய அரசு எதனையும் இலவசமாகக் கொடுக்கவில்லை. எமது மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதங்களை விற்று ஏப்பமிட நாம் இடம் கொடுக்கக் கூடாது

ஹற்றன் பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் மாதாந்தம் 1500 ரூபா வசூல் செய்யப்பட்டு வந்துள்ளது. அவர்களுக்கு இலவசமாக கற்கைநெறிகளை மேற்கொள்ள அரசும் இந்திய அரசும் உதவிகளை வழங்கி வரும் நேரத்தில் அவர்களின் ஏழ்மையையும் பொருட்படுத்தாது அவ்வாறு வசூல் செய்வது முறையற்ற செயல் என்று கூறி நான் பதவிக்கு வந்த பிறகு வசூல் ராஜாக்களின் நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளேன்.

மலையகத்தில் சகல வசதிகளையும் கொண்ட றோயல் கல்லூரி ஒன்றை அமைப்பதுவே எனது குறிக்கோள் ஆகும். இந்த அரசின் காலத்தில் முடியாவிட்டாலும் நிச்சயம் அமைத்துக் கொடுக்கும் முயற்சியை கைவிட மாட்டேன். எமது மத்தியில் ஒற்றுமையும், சமூக உணர்வும் இருந்தால் நாம் நிச்சயமாக இலக்கை அடைந்து விட முடியும் – என்றார்.

# கோட்டா வெற்றிக்கு மொட்டு முக்கியம்!

## கூறுகிறார் ரோஹித அபேகுணவர்தன

கொழும்பு, செப். 11

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெறுவதற்கு மொட்டுச் சின்னமும் முக்கியமானது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

மொட்டுச் சின்னம் தொடர்பாகவே பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர நேற்று முன் தினம் தெரிவித்திருந்தார். அவரின் இந்தக் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –



வெற்றி பெறவேண்டுமாயின் பிரபலயமான வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவது அவசியம் என்பதுபோல் கட்சியின் சின்னமும் முக்கியமானது. மொட்டு என்பது தற்போது மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துள்ளது. அதனை அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன – என்றார். (ஐ)






# தென் துருவத்தை துருவும் ஓர் உயிர் பணயப் பயணம்!

3

பாற்கடல் மு.சிவநேசன்



(நேற்றைய தொடர்ச்சி...)

இவர்கள் பயணித்த கப்பல் Terra Nova 1913 தை மாதம் அங்கிருந்து இங்கிலாந்து நோக்கிப் புறப்பட்டது. இது 10 ஆம் திகதி பெப்ரவரி 1913 இல் நியூசிலாந்தை அடைந்த போதுதான் உலகம் இந்தச் சோக வரலாற்றை அறிந்து கொண்டது.

இங்கிலாந்தில் ஸ்கொட் ஒரு சாதனை வீரனாகப் போற்றப்பட்டான். கடற்படை இராணுவ மற்றும் அரச விருதுகள் கௌரவங்கள் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் தேவாலய ஆராதனைகள் இடம்பெற்றன. The Times உட்பட பல பத்திரிகை பக்கங்களில் இவர்களின் சோக வரலாறு பதியப்பட்டது விற்பனையை தூள்கிளப்பி இருந்தது.

இந்த இழப்பு நோர்வேயின் Roald Amundsen குழுவினரின் முதல் சாதனையை சற்று மழுங் கடித்ததும் உண்மை. தவிர சில வாரங்கள் முன்னதாக சாதனையை நிகழ்த்திவிட்ட Roald Amundsen தான் ஸ்கொட் அணியினை சந்திக்க முடியாமல் போனதுவும் உதவி செய்ய முடியாமல் போனதுவும் உலகின் துரதிஷ்டமே என இரங்கல் செய்தியில் தெரிவித்து இருந்தமையும் குறிப்பிடத் தக்கது.


ஸ்கொட்டின் தகவல் பதிவுகள் நிறைய தகவல்களை உலகினுக்கு தந்திருந்தாலும் அவன் நேரில் மீண்டிருந்தால் அதனைப் போல பல மடங்கு தகவல்களை உலகம் இழக்காமல் இருந்திருக்கும் என்பது ஜீரணிக்க முடியாத கசப்பான உண்மையே. இறந்த தமது குழுவினரது குடும் பத்தினருக்கு தேவையான, வழங்கப்படவேண்டிய, நிவாரணங்கள் பற்றியும்கூட அவன் குறிப்பிட்டிருக்கத் தவறவில்லை.

இறந்தவாகள் மட்டுமல்ல வெவ்வேறு உதவிப் படிநிலைகளில் கப்பலில் இணைந்திருந்த தப்பி வந்த மாலுமிகள் உதவியாள்கள் பலரும் நிகழ்வுகளில் கௌரவிக்கப்பட்டார்கள்.

அதன்படி பல ஆயிரம் பவுண்டுகள் நிவாரண நிதியாக சேகரிக்கப்பட்டன. அதன் பெறுமதி இன்றைய பல மில்லியன் பவுண்டுகளுக்கு சமமானது.

ஸ்கொட்டின் செயற்பாடுகள் விமர்சனங்களுக்கு உள்ளாகவும் செய்தன. நோர்வே குழுவைப் போல திட்டமிட்டு செயற்பட இவர்களால் இயலவில்லை. சரியான நாய்கள் உபகரணங்களைத் தெரிவுசெய்து பயன்படுத்தவில்லை. தன்னையும் குழுவினரையும் இக்கட்டில் மாட்டிவிட்டமை என்றெல்லாம் குற்றச்சாட்டுக்கள் ஒருபுறம். பிரிட்டனில் அதிக மாகவும் நியூசிலாந்து வரையென உலகெங்கும் பல நினைவாலயங்கள் அமையவும் செய்தன.

சாதனைக் கப்பல் Terra Nova 1884 இல்




இருந்து திமிங்கில வேட்டையில் ஈடுபட்டு 1903 இல் அன்டாட்டிக் பயணத்தில் உதவி இருந்தது. திரும்பியதும் இதன் மதிப்பும் உயரவே செய்தது.

William Ziegler என்ற அமெரிக்க கோடீஸ்வரரால் வாங்கப்பட்ட அது வட துருவ ஆக்டிக் கடற் பிராந்திய ஆராய்ச்சியில் மீட்பு நடவடிக்கையில் ஈடுபடலானது.

மீண்டும் இதனை ஸ்கொட் அணிக்காக தெரிவு செய்தவர்கள் 12,500 பவுண்டுகளுக்கு 1909 இல் கொள்வனவு செய்து கொண்டனர். 1910 இல் இரண்டாவது தடவையாக அன்டாட்டிக்கா புறப்பட்ட இது 1913 இல் ஸ்கொட்டை இழந்து பிரிட்டன் திரும்பி இருந்தது.மீண்டும் இது முன்னைய நிறுவனத்தால் வாங்கப்பட்டு நிலக்கரி



ஏற்றல் மற்றும் உதவி வழங்கல் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டது.

1943 இல் கிரீன்லன்ட் முகாம்களுக்கான வழங்கல் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் செப்ரெம்பர் 12 இல் கடும் சேதத்தை சந்தித்து அமிழ்ந்து போனது. அதன் சில பாகங்கள் வேலைப்பாடுகள் வேல்ஸ் அருங்காட்சியகத்தில் பேணப்படுகின்றன.

2012 இல் Schmidt Ocean Institute இனது RV Falkor என்ற கப்பல் இதன் சிதைவுகளைக் கண்டுபிடித்தது.

மீண்டும் அன்டாட்டிக்கா பற்றி பார்க்கப் போனால் பூமியில் மிகவும் குளிரான கண்டம் இதுவே. கோடையில் இங்கு இருபத்துநான்கு மணிநேரமும் பகலாகவே இருக்கும். கண்டம் கடல் மட்டத்தில் இருந்து மூவாயிரம் மீற்றர் உயர மாக இருப்பதனால் வட துருவமான ஆக்டிக் இனைவிடக் குளிர் கூடியதாக காணப் படுகிறது. அத்தோடு குளிர் காலத்தில் இப் பிர தேசம் சூரியனில் இருந்து தொலைவாக மறைவாக இருளாக தென்படுகிறது.

தற்போது சுமார் 5000 வரையான ஆய் வாளர்கள் அங்கே கோடையில் ஆங்காங்கே தங்கி விடுகிறார்கள். குளிர் காலங்களில் இந்த எண்ணிக்கை ஆயிரமாக குறைவடைகிறது. இங்கே திமிங்கில வேட்டைக் குழுக்கள் தங்கி இருந்து நிர்வாகம் நடத்தி இருக்கிறார்கள். குடும்பம் நடத்தி இருக்கிறார்கள். குழந்தையும் பெற்று இருக்கிறார்கள்



1913 ஒக்ரோபா 8 இல் அருகிலுள்ள Grytviken தீவில் ஜக்கொப்சென் தம்பதிக ளுக்கு முதலாவதாக குழந்தை கிடைத்து இருந் தது. இவர்களின் இரண்டாவது குழந்தையும் அங்கேதான் பிறந்திருந்தது. 1921 வரை இவர்கள் அங்கே கடமையில் இருந்தனர்.

அன்டாட்டிக்காவில் கால் பதித்த முதலாவது பெண் என்ற அந்தஸ்தை 1930 இல் David Henry Lewis என்ற பெண்மணி தக்கவைத்துக் கொள்கிறார். 1969 இல் ஒரு பெண்கள் அணி முதன் முதலாக கண்டத்தில் தென் துருவ புள்ளியில் கால் பதித்து இருந்தது.

[இன்னும் வரும்]





## அமெரிக்க வல்லமைக்கு சவால் விடுத்த

# இரட்டைகோபுர தாக்குதல்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இருந்த இரட்டை கோபுரம் மீது அல்கொய்தா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதன் 14 ஆம் ஆண்டு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது. உலகையே அச்சுறுத்திய இந்த தீவிரவாத தாக்குதலில், மொத்தமாக 2,977 அப்பாவிகள் கொல்லப்பட்டனர்.

அல்கொய்தா தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பழிதீர்க்க, கடந்த 2001 ஆம் ஆண்டு இதே நாளில் அந்த கோர சம்பவம் நிறைவேறியது. அமெரிக்காவில் பயணிக்கும் 4 விமானங்களைக் கடத்திய அல்கொய்தா தீவிரவாதிகள், அவற்றில் இரண்டை, நியூயோர்க்கில் இருந்த இரட்டை கோபுரம் மீது மோதச் செய்தனர். உலகின் வர்த்தக கேந்திரமாக விளங்கிய இந்த 2 கோபுரங்களும், அடுத்தடுத்த விமானத் தாக்குதல்களால், முற்றிலுமாக நிலைகுலைந்து போயின.

முதல் விமானம் மோதியதால் அங்கிருந்த மக்கள் சுதாரித்துக் கொள்வதற்கு முன்பாகவே, இரண்டாவது விமானமும் இரட்டை கோபுரம் மீது மோதியது. இந்த கோர தாக்குதலால், இரண்டு கோபுரங்களும் அடுத்தடுத்து சீட்டுக்கட்டுகள் போல் மண்ணோடு மண்ணாகின. இந்தத் தாக்குதலால் ஒட்டுமொத்த அமெரிக்காவும் நிலைகுலைந்து போனது உண்மைதான்.

இது ஒருபுறம் என்றால், உலகின் மிகவும் பாதுகாப்பான இடமாக கருதப்பட்ட அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் மீதும், விமானத்தை மோதி, அல்கொய்தா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். வெர்ஜீனியாவில் நடத்தப்பட்ட இந்த தாக்குதல் அமெரிக்காவின் வல்லமைக்கு சவால் விடுக்கும் விதமாக அமைந்தது.

கடத்தப்பட்ட மற்றொரு விமானத்தை அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை மீது மோதி வெடிக்க வைக்க அல்கொய்தா தீவிரவாதிகள் தீட்டிய சதி, அதே விமானத்தில் பயணம் செய்த நாட்டுப்பற்று மிக்க அமெரிக்கப் பிரஜைகளால் முறியடிக்கப்பட்டது. அல்கொய்தா தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க அரசும், அதன் மக்களும் போராடத் தயாராகி விட்டனர் என்பதை முதன் முதலாக உலகிற்கு உணர்த்திய நிகழ்வும் இதுதான்.

இரட்டை கோபுரம் மீதான தாக்குதல் நடந்து 18 ஆண்டுகள் முடிந்து விட்ட போதிலும், அதில் உயிர் பிழைத்த சிலர், உடல் நலக் குறைவால் இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கிறார் கள். இதற்கு சிறந்த உதாரணம், மார்ஸி பார்டர்ஸ். இரட்டை கோபுரத்தில் பணியாற்றி வந்த இவர், அல்கொய்தா தீவிரவாதிகள் விமானத்தை மோதி தாக்குதல் நடத்திய போது உயிர் பிழைத்தவர்களில் ஒருவர். இரட்டை கோபுரம் தகர்க்கப்பட்டபோது, உடல் முழுவதும் புழுதியால் மூடப்பட்டு இவர் நடந்து வந்த போது எடுக்கப்பட்ட புகைப்படம், இரட்டை கோபுர தாக்குதலின் கோரத்தை உலகிற்கு உணர்த்தியது.

தாக்குதலில் உயிர் பிழைத்த போதிலும், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மார்ஸி பார்டர்ஸ், தனது சொத்தின் பெரும் பகுதியை மருத்துவம் செய்வதற்காகவே செலவழித்தார். எனினும், 2015 ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி, மார்ஸி பார்டர்ஸ் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இரட்டை கோபுரம் மீதான தாக்குதலின் போது உயிர் பிழைத்த நூற்றுக்கணக்கானோர், அதன் தாக்கத்தில் இருந்து மனதளவில் மீளாமல்தான் வாழ்ந்து வருகின்றனர்.

உலக வர்த்தக மைய கட்டிடத்தில் பணியாற்றியவர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் உடல்கள் முழுமையாக எரிந்த நிலையில் சாம்பலும், சில எலும்புகள் மட்டுமே கிடைத்தன. அவற்றைக் கொண்டு உயிரிழந்தவர்களை அடையாளம் காணும் பணி நடந்து வந்தது. 18 ஆண்டுகள் ஆன பின்பும் அந்தப் பணி முழுமையாக முடியவில்லை.

**உலகையே அதிரவைத்த அமெரிக்காவின் இரட்டை கோபுரம் தாக்குதல் தினம் இன்றாகும்.**



நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையத்தின் இரட்டை கோபுர கட்டடத்தின் மீது ஒரு விமானத்தை மோதி தகர்த்தனர். இதில் அந்த இரண்டு விமானங்களில் இருந்த பயணிகள் 147 பேரும், வர்த்தக மைய கட்டடத்தில் இருந்த 2,606 பேரும் பலியாகினர். மூன்றாவது விமானத்தை எர்லிங்டன் என்ற இடத்தில் உள்ள அந்நாட்டின் ராணுவ தலைமையகமான பென்டகன் மீது மோதச் செய்தனர். இதில் விமானத்தில் இருந்த 59 பேரும், பென்டகனில் இருந்த 125 ராணுவ வீரர்களும் பலியாகினர். 4 ஆவது விமானத்தை கடத்திய தீவிரவாதிகளுக்கும், அதிலிருந்த பயணிகளுக்கும் சண்டை நடந்து, முடிவில் விபத்துக்குள்ளாகி தீப்பற்றி எரிந்தது.

# தமிழ்த் தேசியத்தின்...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிலையில் தமிழ் மக்கள் பேரவை மறுசீரமைப்பு புதிய உத்வேகத்துடன் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டியதைத்தவிர வேறு வழி எதுவும் தமிழ் மக்களுக்கு கிடையாது. ஆதலால் தமிழ் மக்கள் பேரவை உருவாக்கிய அனைத்து மாற்று அரசியல் சக்திகளும் தங்களுக்கிடையேயான பேதங்களை முற்றிலும் மறந்து பிரதான எதிரி உடனடி எதிரி உடனடிப் பிரச்சினைகள் என்பனவற்றிற்கு முகங்கொடுத்து மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியது வரலாற்று கட்டளையாகும். தனிப்பட்ட வி ருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் அபூர்வமாக தமிழ் மக்களுக்கான தலைவிதியை முன்னெடுத்து உழைக்க வேண்டிய காலகட்டம் இதுவாகும். இந்நிலையில் எழுத தமிழ் நிகழ்வை மிக வெற்றிகரமாக முன்னெடுக்க அனைத்து தமிழ் மக்களும் பெரிதும் பாடுபடவேண்டும்.

ஈழத்தமிழ் தேசியவாதத்தை மீள் கட்டமைப்பு செய்ய வேண்டும் அதற்காக பண்பாட்டு பணிகள் மூலமாகவும் அடைக்கலமும் முன்னெடுப்புகளை ஆக வேண்டிய அவசர காலம் இது. இந்நிலையில் எழுக தமிழ் பேரணியை அனைத்து உட்பேதங்களையும் கடந்து முன்னெடுக்க வேண்டியது அவசியம்.

கட்சி வேறுபாட்டு பட்டிகளுக்குள் அடைபட்டுக் கிடக்கும் வெள்ளாடுகள் தங்களை மடக்கிவைத்துள்ள ஓநாய்களை தாண்டி , பட்டி வேலிகளையும் தாண்டி எழுக தமிழ் பேரணியை பலப்படுத்த வேண்டிய பொறுப்பைக் கொண்டவர்களாக உள்ளனர்.

மாற்றுத்தலைமையைபற்றிபேசுகின்ற அனைவரும் அத்தகைய அனைத்து கட்சியினரும் முதலில் ஒன்றுபட்டு மக்கள் முன் தமது ஐக்கியத்தை காட்சிப்படுத்துவார்களேயானால் வேறு பட்டிகளுக்குள் இருக்கும் வெள்ளாடுகள் அனைத்தும் வேலிகளைத் தாண்டிவந்து எழுக தமிழ் பேரணியை தாமாக பலப்படுத்தும். அது ஈழத்தமிழ் தேசியவாதத்தை பலப்படுத்தும். அதுவே இப்போது தமிழ் மக்களுக்கு வேண்டியதாகும்.

இது உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தமிழ் மக்களின் குரலையும் பேரம் பேசுவதற்கான அரசியல் பலத்தையும் தமிழ் மக்களுக்கும் மாற்று அரசியல் பேசும் அரசியல் தலைவர்களுக்கும் அளித்தும். உள்நாட்டு வெளிநாட்டு அரசில் சக்திகளாலும் தமிழ் தலைவர்களாலும் ஏமாற்றப்பட்டு, கைவிடப்பட்டு அநாதரவாக காணப்படும் தமிழ் மக்களுக்கு தற்போது எழுக தமிழ் பேரணி மூலமான தமிழ் தேசிய எழுச்சியை முன்நிறுத்துவதை தவிர வேறு மார்க்கம் எதுவும் கிடையவே கிடையாது - என்றுள்ளது. (ஐ)

# இலங்கை கிரிக்கெட் வீரர்கள் 10 பேர் பாகிஸ்தான் தொடரிலிருந்து விலகல்



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் திமுத் கருணரத்ன, வேகப்பந்துவீச்சாளர் லசித் மலிங்க உள்பட 10 வீரர்கள் பாதுகாப்பு தொடர்பான அச்சங்களால் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஒருநாள் மற்றும் ரி20 போட்டித் தொடர்களில் விளையாடுவதில் இருந்து விலகியுள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் 27 முதல் ஒக்ரோபர் 9 வரை, இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு அணிகளும் 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் 3 ரி20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளன.

பாதுகாப்பு தொடர்பாக விளக்கிவிட்டு பாகிஸ்தான் தொடரில் விளையாடுவது குறித்து முடிவெடுக்க இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டில் லாகூரில் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் சென்ற பேருந்து மீது தாக்குதல் நடத்தப்பட்ட பிறகு பாகிஸ்தான் மண்ணில் எந்த சர்வதேச டெஸ்ட் போட்டியும் நடத்தப்படவில்லை.

இந்தத் தாக்குதலில் பொதுமக்களில் இருவரும், பாதுகாப்பு படையினர் 6 பேரும் கொல்லப்பட்டனர். மேலும் இந்த தாக்குதலில் 6 வீரர்கள் காயமடைந்தனர்.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் வெளியிட்ட அறிக்கையில், பாகிஸ்தானில் நடைபெறவுள்ள தொடர் குறித்த பாதுகாப்பு ஏற்பாடு பற்றி பேசுவதற்கு வீரர்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஒருநாள் மற்றும் ரி – 20 தொடர்களில் பங்கேற்பது தொடர்பாக வீரர்கள் முடிவெடுக்க வாய்ப்பளிக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டது.

நிரோஷன் டிக்வெல்ல, குசால் பெரேரா, தனஞ்சய டி சில்வா, திசர பெரேரா, அகில தனஞ்சய, சண்டிமல், மத்தியூஸ், லக்மல், மலிங்க மற்றும் கருணா ரத்ன ஆகிய 10 வீரர்கள் பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தில் இருந்து விலகியுள்ளனர். (ஐ)

# மேற்கிந்தியத் தீவு அணியின் தலைவரானார் பொல்லார்ட்

மேற்கிந்தியத்தீவு ஒருநாள் மற்றும் ரி – 20 அணிகளுக்கு பொல்லார்ட் அணித் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் மேற்கிந்தியத் தீவு மோசமான தோல்வியைச் சந்தித்தது.



இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி-20 கிரிக்கெட் தொடரில் ஒரு போட்டிகளில் கூட வெற்றி பெறவில்லை.

இந்நிலையில் மேற்கிந்தியத் தீவு ஒருநாள் மற்றும் ரி-20 அணிகளின் அணித் தலைவர் மாற்றப்பட்டு பொல்லார்ட் அணித் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஒரு நாள் கிரிக்கெட் அணியின் அணித் தலைவனாக ஜேசன் ஹோல்டரும், ரி – 20 அணியின் தலைவராக பிராத் வைட்டும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பங்களாதேஷ் அணியை பந்தாடியது ஆப்கன்




பங்களாதேஷுக்கு எதிராக நடைபெற்ற ஓரே டெஸ்ட் ஆட்டத்தில் 224 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது ஆப்கானிஸ்தான். இரு அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சிட்டகாங் நகரில் நடைபெற்றது.

முதல் இன்னிங்ஸில் ஆப்கானிஸ்தான் 342 ஓட்டங்களுடனும், பங்களாதேஷ் 205 ஓட்டங்களுடனும் சகல விக்கெட்டுக்களையும் இழந்தன.

அதன் பின் இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய ஆப்கன் அணி 260 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இதற்கிடையே பங்களாதேஷ் அணிக்கு வெற்றி இலக்காக 398 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

எனினும் ஆட்டத்தின் 4ஆவது நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை முதலே பலத்த மழை பெய்ததால், பாதிப்பு ஏற்பட்டது. 42ஆவது ஓவர் முடிவில் 125/6 ஓட்டங்களுடன் திணறிக் கொண்டிருந்தது பங்களாதேஷ். நேற்றுமுன்தினம் காலையிலும் சிட்டகொங்கில் மழை பெய்ததால் தொடர்ந்து ஆட்டத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. 4 விக்கெட்டுகள் மட்டுமே கைவசம் இருந்த நிலையில் 262 ஓட்டங்கள் வெற்றிக்கு தேவை என்ற நிலையில் பங்களாதேஷ் இருந்தது.

அதன் பின்னர் 18.3 ஓவர்கள் வீச வேண்டும் என நடுவர்கள் கூறினர். அப்போது ஷகிப் அல் ஹசன், சௌமிய சர்க்கார் ஆடிக் கொண்டிருந்தனர். எனினும் அவர்களால் ஆப்கன் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் விரைவில் பெவிலியன் திரும்பினர்.

பங்களாதேஷ் தரப்பில் ஷத்மன் இஸ்லாம் 41, ஷகிப் அல் ஹசன் 44, முஷ்பிகுர் ரஹீம் 23 ஓட்டங்களை சேர்த்தனர். மற்ற வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களுடன் அவுட்டாகி திரும்பினர்.

61.4 ஓவர்களில் 173 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது பங்களாதேஷ்.

அற்புதமாக பந்துவீசிய ஆப்கன் அணித் தலைவர் ரஷீத் கான் 6 – 49 விக்கெட்டுகளைச் சாய்த்தார். ஜாகீர் கான் 3 – 59, முகமது நபி 1 – 39 விக்கெட்டை வீழ்த்தினர்.

இறுதியில் 224 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது ஆப்கானிஸ்தான். இது அந்த அணியின் 3 ஆட்டங்களில் கிடைத்த 2ஆவது வெற்றியாகும்.

2 இன்னிங்ஸ்களிலும் அபாரமாக பந்து வீசி 11 விக்கெட்டுகளை வீழ்த்தியும், அரைசதம் அடித்த ரஷீத்கான் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்ற ஆப்கன் வீரர் முகமது நபிக்கு மைதானத்தில் சக வீரர்கள் பிரியாவிடை அளித்தனர்.(ஐ)

# இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது மயிலங்காடு ஞானமுருகன் அணி

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் அணிக்கு 11 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 03:01என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது.

ஞானமுருகன் அணி சார்பாக பவித்திரன், லஸ்ரின், ஜெகன் ஆகியோர் தலா ஒரு கோலையும் மற்றும் றோயல் அணி சார்பாக எடிசன் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர்.



# சந்தேகம் வேண்டாம் எங்களை நம்புங்கள்!



## மக்களிடம் மன்றாடுகின்றார் கோட்டா

கொழும்பு, செப். 11

நாட்டு மக்கள் எம் மீது சந்தேகம் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. நாம் எதிர்காலத்தில் உருவாக்கும் அரசில் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க முழுமையான நடவடிக்கை எடுப்போம்.

–இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று தேசிய உற்பத்தியாளர் சர்வ தேச வர்த்தகத்துடன் போட்டியிட முடியாத நிலையில், தேசிய உற்பத்தியாளர் தமது உற்பத்திகளை கைவிடும் நிலைமை உருவாகியுள்ளது. அவர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கிப் பாதுகாத்து முன்னேற்றவேண்டும்.

அது மட்டும் அல்லாது தேசிய பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது. இந்த நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்து குறுகிய காலத்தில் சமாதானத்தை உருவாக்கி அந்தச் சமாதானத்தைப் பாதுகாத்தோம்.

தற்போது துரதிஷ்டவசமாகவும், எமது பாதுகாப்பைப் பலவீனப்படுத்திய காரணத்தாலும் இந்த நாட்டில் மீண்டும் குண்டுகள் வெடிக்க ஆரம்பித்துள்ளன.

மீண்டும் பயங்கரவாதத்தை ஒழிக்க முயற்சிகளை எடுக்கையில் மக்கள் சுதந்திரத்தைப் பறிக்கவே நாம் முயற்சிகளை எடுப்பதாகக் கூறுகின்றனர். அன்று நாம் போரை முடிக்க முன்வந்தது தமிழர்களைப் பாதுகாக்கவே. வடக்கு – கிழக்குப் பகுதிகளையும் நாட்டின் ஏனைய பகுதிகளைப் போல் மாற்றி அபிவிருத்தியின் பாதையில் கொண்டு சென்றோம் – என்றார்.

# ஆரம்பக் கல்வி கற்றல்வள நிலையம் திறப்பு







முல்லைத்தீவு – அளம்பில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி கற்றல் வள நிலைய கட்டடம் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினால் அருகிலுள்ள பாடசாலை சிறந்தபாடசாலை என்னும் செயற்றிட்டத்தில் அமைக்கப்பட்ட ஆரம்பக்கல்விக் கற்றல் வள நிலையமே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் முதல்வர் ந.அல்பிரட் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வு, விருந்தினர் வரவேற்புடன் தொடங்கியது. தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றமையையடுத்து, ஆரம்பக் கல்வி கற்றல் வள நிலைய கட்டடங்கள் திறந்துவைக்கப்பட்டன.




இக் கற்றல்வள நிலையம் செயற்பாட்டறை, வாசிப்பறை, மொழி ஆய்வுகூடம் என மூன்று பிரிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

இதில் மொழி ஆய்வுகூடத்தினை முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்திறந்துவைத்தார்.

அதேபோல் செயற்பாட்டறையை வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி சிறீஸ்கந்தராசா திறந்து வைக்க, வாசிப்பறையை முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் உமாநிதி புவனராஜா திறந்துவைத்தார்.



கட்டடத் திறப்பைத் தொடர்ந்து மாணவர்களது கலை நிகழ்வுகள், விருந்தினர்களது உரைகள் என்பனவும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி சிறீஸ்கந்தராசா, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் உமாநிதி புவனராஜா, முல்லைத்தீவு கட்டடங்கள் திணைக்கள பொறியியலாளர் விவேகானந்தன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், அமலதாஸ், கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், பங்குத் தந்தை என பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து இந் நிகழ்வினைச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# அவன்கார்ட் வழக்கில் 7573 குற்றச்சாட்டுகள்

## குற்றப்பத்திரம் தாக்கலானது

கொழும்பு, செப். 11

அவன்கார்ட் வழக்கில் நிஸங்க சேனாதிபதி உள்ளிட்டோர் மீது 7573 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கை விசாரணை செய்யும் ட்ரயல் அட் பார் மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழு முன்னிலையில் சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

இந்தப் பிரதிவாதிகளுக்கு எதிராக 7573 குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்கு தொடர உள்ளதாகச் சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 ஆம் திகதி மற்றும் 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், ஹிக்கடுவ கடற்பகுதியில் எம்.வி. அவன்கார்ட் என்ற கப்பலினுள் உரிய ஆவணங்கள் இன்றி, 816 தானியங்கித் துப்பாக்கிகள் மற்றும் 290,035 தோட்டாக்களை வைத்திருந்ததன் ஊடாகப் பிரதிவாதிகள் குற்றம் இழைத்துள்ளார்கள் எனக் குற்றம் சுமத்தி, சட்டமா அதிபரினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எழுக தமிழுக்கு ஆதரவுகோரி வலைப்பாடு மக்களுடன் சந்திப்பு!



கிளிநொச்சி, செப்.11

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வலைப்பாடு கிராம மக்களுடன், வரும் 16 ஆம் திகதி முன்னெடுக்கப்படவிருக்கும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு ஆதரவுகோரி தமிழ் மக்கள் பேரவையினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

வலைப்பாடு கிராமத்தை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர்களது அழைப்பின் பேரில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இச்சந்திப்பில் தமிழ் மக்கள் பேரவை சார்பில் எழுக தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் சென்று கலந்துரையாடல் நடத்தியுள்ளார்கள்.

வலைப்பாடு க.தொ.கூ.சங்க நிர்வாகிகள், வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகம் மற்றும் சென் ஆன்ஸ் விளையாட்டுக் கழக வீரர்கள், கிளி/76 பொன்னாவெளி கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஜெகமீட்பர் சனசமூக நிலைய நிர்வாகிகள் பங்கேற்றிருந்த இச்சந்திப்பில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் தமிழர்கள் தேசம் அணிதிரள வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டிருந்தமையுடன் தமிழ்த் தேசிய அரசியல் போக்கு குறித்தும் மக்கள் இயக்கத்தின் முக்கியத்துவம் குறித்தும் ஆரோக்கியமான கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.



# சவேந்திர சில்வாவின் விவகாரம் ஜெனீவாவில் எதிரொலிக்குமா?

கொழும்பு, செப். 11

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 42ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ள நிலையில், இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை நிலைமைகள் குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடர் நிகழ்ச்சி நிரலில் இலங்கை தொடர்பான விவகாரங்கள் எதுவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம், போர்க் குற்றச்சாட்டு சுமத்தப்படும் லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட விவகாரம் என்பன குறித்து இந்த அமர்வில் கரிசனை செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 42ஆவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்சலெட் உரையாற்றியிருந்தார். அவர் தனது உரையில் பல்வேறு நாடுகளின் மனித உரிமைகள் நிலைமைகள் குறித்து கவலை வெளியிட்டிருந்தபோதும் இலங்கை விவகாரங்கள் குறித்து எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. (ஐ)

# 8 அமைச்சர்கள் மீது முறைப்பாடு!

கொழும்பு, செப். 11

2018 .19 ஆம் ஆண்டிற்கான சொத்து அறிவிப்புகளைச் சமர்ப்பிக்கத் தவறிய எட்டு அமைச்சர்கள் மீது முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளதாக ஊழல் எதிர்ப்பு அமைப்பான டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இலஞ்சம் மற்றும் ஊழல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது. (ஐ)

# அக்கராயன் மகா வித்தியாலயத்தில் புதிய ஆசிரியர் விடுதி திறந்து வைப்பு

கிளிநொச்சி, செப். 11

நாடளாவிய ரீதியில் 9 ஆயிரத்து 64 பாடசாலைகளில், 18 ஆயிரம் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கென மொத்தமாக 6500 கோடி ரூபா கல்வியமைச்சினால் ஒதுக்கப்பட்ட சுமார் 90 இலட்சம் ரூபா நிதியில் கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்திற்காகப் புதிதாக அமைக்கப்பட்ட ஆசிரியர் விடுதி நேற்றுத் திறக்கப்பட்டது

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் சுமார் 90 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஆசிரியர் விடுதி கட்டடத்தைக் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்துவைத்தார்.

பாடசாலை முதல்வர் மதுரநாயகத்தின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர் கமல்ராஜன் மற்றும் ஆசிரியர்கள்,மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)



## பொலிஸ் நிலையத்தில் திருடப்பட்ட இரண்டு ரி –56 துப்பாக்கிகளும் மீட்பு!

கொழும்பு, செப். 11

பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் இருந்து காணாமற் போன ரி - 56 துப்பாக்கிகள் இரண்டும் பொலிஸாரினால் அக்குரஸ்ஸ பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

பாணந்துறையில் இரண்டு பொலிஸார் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பான விசாரணையிலேயே துப்பாக்கிகள் சிக்கின. பாணந்துறை இராணுவ முகாமில் கடமையாற்றும் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறை பொலிஸ் நிலையத்தில் இருந்து 2019 ஆம் ஆண்டு ஜுலை 6 ஆம் திகதி இந்த துப்பாக்கிகள் இரண்டும் காணாமல் போயிருந்தன. இதையடுத்து, பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தனியார் தொலைக்காட்சிகளும் இனி பாதுகாப்பமைச்சின் கீழா?

### உருவாகியது புதிய சர்ச்சை

கொழும்பு, செப். 11

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்திருப்பது குறித்து கவலை வெளியிட்டுள்ள ஊடக ஆர்வலர்கள் ,இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் நடக்கவுள்ள சூழ்நிலையில் அரச பிரதான ஊடகத்தை ஜனாதிபதி எந்த அடிப்படையுமின்றிப் பாதுகாப்பமைச்சின் கீழ் கொண்டு வந்துள்ளமை குறித்து பிரதமரிடம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் அனைத்து தனியார் தொலைக் காட்சிகளும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனச் சட்டமூலத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதால் ஜனாதிபதியின் இந்தத் தீர்மானத்துக்கமைய அவையும் பாதுகாப்பு அமைச்சின் கீழா வருகின்றனவாவென்று சட்ட நிபுணர்கள் பலர் பிரதமரிடம் கேள்வியெழுப்பியுள்ளனர்.

ரூபவாஹினி பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதையடுத்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான முறுகல் நிலைமை மேலும் தீவிரமடைந்துள்ளதாக அறியமுடிகின்றது. (ஐ)

## கடவுச்சீட்டு விண்ணப்பத்தில் கருவிழி ஸ்கானிங் நடைமுறை

கொழும்பு, செப். 11

இலங்கை கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும்போது கருவிழி ஸ்கான் (Iris-recognition) அடையாளம் காண்பதற்கான முறை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் தொடக்கம் இது நடைமுறைப்படுத்தப்படும் என்று திணைக்கள கட்டுப்பாட்டாளர் பசான் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உயிரியல் தகவல்களை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான கருவிகள் இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன எனவும் அவர் கூறினார்.

போலியான தகவல்களை உள்ளடக்கிய கடவுச்சீட்டைக் கொண்டவர்கள் நாட்டுக்குள் பிரவேசித்தல் மற்றும் நாட்டில் இருந்து வெளியேறுவதை அடையாளம் காண்பதற்கு புதிய நடைமுறை உதவியாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.09.2019 இல் வெளியிடப்பெற்றது.



# ஆஸியில் காட்டுத் தீ! மக்கள் வெளியேற்றம்

கான்பரா, செப். 11


ஆஸ்திரேலியாவின் கிழக்கு மாகாணங்களான குவின்ஸ்லாந்து மற்றும் நியூசவுத் வேல்ஸில் பல இடங்களில் காட்டுத்தீ பரவி வருவதால் நூற்றுக் கணக்கான மக்கள் இருப்பிடத்தைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

அங்கு அதிவேகமாக வீசும் காற்றால் 140 இடங்களில் கட்டுக்கடங்காமல் காட்டுத்தீ பற்றி எரிகிறது. வடகிழக்கு மாநிலமான குயின்ஸ்லாந்தில் குறைந்த ஈரப்பதம், அதிக காற்று, காய்ந்த தாவரங்கள் உள்ளிட்ட காரணங்களால் 85 இடங்களில் தீப்பற்றி இருக்கிறது என்றும் 84 வீடுகள் காட்டுத்தீயால் சேதமடைந்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

மேலும் 400 இற்கும் மேற்பட்டோர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் காட்டுத்தீயால் உயிரிழப்போ காயமோ எதுவும் ஏற்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதேபோல் நியூ சவுத் வேல்ஸில், 55 இடங்களில் பற்றியுள்ள காட்டுத் தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர்.

# பிரான்ஸில் வெயிலுக்கு 1,435 பேர் உயிரிழப்பு



பரிஸ், செப். 11

பிரான்ஸில் கோடை வெயிலுக்கு 1,435 பேர் பலியாகியுள்ளனர் என தற்போது அதிகாரபூர்வ தகவல் வெளியிடப்பட்டு உள்ளது.


பிரான்ஸில் கோடை காலமான கடந்த ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் வரலாறு காணாத அளவுக்கு வெயில் வாட்டி வதைத்தது. அனல் காற்று வீசியது. அங்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் 46 செல்சியஸ் வெப்பநிலை பதிவானது.

இதன் காரணமாக பிரான்ஸில் பல முறை சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளிகள் மூடப்பட்டதுடன், பொது நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப் பட்டன. வெயில் தாக்கத்தினால் பலர் உயிர் இழந்தனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், பிரான்ஸில் கோடை வெயிலுக்கு 1,435 பேர் பலியானதாக தற்போது அதிகாரபூர்வ தகவல் வெளியிடப்பட்டு உள்ளது.

இதேபோல் மற்ற ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்து, பெல்ஜியம், ஜெர்மனி, லக்சம்போர்க் மற்றும் நெதர்லாந்திலும் இது வரை இல்லாத அளவுக்கு வெப்பநிலை பதிவானது.

எனினும் கோடை வெயிலினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்த அதிகாரபூர்வ தரவுகளை, பிரான்ஸ் நாட்டை தவிர வேறு எந்த நாடும் தகவல்கள் வெளியிடவில்லை.



# பார்வையாளர்களை கவர கானகத்துடன் மைதானம்!

வியன்னா, செப் 11

ஆஸ்திரியாவில் பார் பாரஸ்ட் என்ற பெயரில் திறக்கப்பட்டுள்ள வனப்பு மிகுந்த வனப்பகுதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ள உதைபந்து மைதானம் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

கிளஜன்பர்ட் (Klagfnfurt) நகரில் 30 ஆயிரம் அரங்குகள் கொண்ட மைதானத்தின் நடுவில் 300 மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. காலநிலை மாற்றம் கானகத்தின் அழிவுகளை பார்க்கும்போது எதிர்காலத்தில் இயற்கையை அருங்காட்சியங்களில் மட்டுமே கண்டுகளிக்கும் சூழல் வந்தாலும் வரலாம் என்ற அச்சம் பலரின் மனதில் குடிகொண்டுள்ளது.

இந்நிலையில், சூற்றுச்சூழல் மற்றும் காடுகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக, கிளாஸ் லிட்மேன் (Klaus Littmann) என்பவர் இந்த மைதானத்தை வடிவமைத்துள்ளார்.

பசுமையான மரங்கள் மையத்தில் வசீகரிக்க, மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒளி திரைகளில் பெண்கள் பாடுவது, வயலின் வாசிப்பது போன்ற காட்சிகள் திரையிடப் படுகின்றன. கண்ணிற்கும், காட்சிக்கும் விருந்தளித்து நிற்கும் இந்த கால்பந்து மைதானத்தில் பார்வையாளர்கள் குடும்பத்துடன் வந்து பொழுதைக் கழித்து விட்டு மகிழ்ச்சியுடன் செல்கின்றனர். (உ)

# வடகொரியா மீண்டும் நேற்று இரு ஏவுகணைகள் சோதனை!

பியொங்யாங், செப். 11

வடகொரியா நேற்றுக் காலை 2 குறுந்தொலைவு ஏவுகணைகளை சோதனை நடத்தியுள்ளது. தெற்கு பியாங்கன் மாகாணத்தில் இருந்து கிழக்குப் பகுதியை நோக்கி ஏவுகணைகளை செலுத்தி அந்நாடு பரிசோதித்துள்ளது.

இந்த ஏவுகணைகள், 330 கிலோ மீற்றர் தொலைவுக்கு பாய்ந்து சென்றதாக தென் கொரிய ராணுவமும் குறிப்பிட்டுள்ளது.

வடகொரியா மற்றும் தென் கொரியா இடையேயான எல்லைப் பகுதியில் அமெரிக்க அதிபர் டிரம்பும், வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன்னும் கடந்த ஜூன் மாதம் சந்தித்துப் பேசினர். அதன்பிறகு வடகொரியா ஏவுகணைகளை சோதனை நடத்தியிருப்பது இது 8ஆவது முறையாகும்.



அமெரிக்காவுடன் இம்மாத இறுதியில் பேச்சு நடத்த விரும்புவதாக வடகொரிய வெளியுறவுத் துறை இணையமைச்சர் சொசன் ஹூஇ தெரிவித்திருந்தார். அவர் இவ்வாறு தெரிவித்த சில மணி நேரங்களில் ஏவுகணைகள் சோதிக்கப்பட்டுள்ளன.

# டோக்கியோவை தாக்கிய சக்திவாய்ந்த பசாய் புயல்



ரோக்கியோ, செப். 11

ஜப்பான் நாட்டின் ரோக்கியோ நகரை தாக்கிய பசாய் புயலுக்குப் பெண் ஒருவர் பலியான நிலையில், மின் இணைப்புகள் போக்குவரத்து ஆகியவை கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

ஜப்பான் தலைநகரான டோக்கியோவின் கிழக்கு பகுதியை, திங்கட்கிழமை காலையில் சக்திவாய்ந்த பசாய் புயல் தாக்கியது. மணிக்கு 207 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய சுழற்காற்றில் மரங்கள் மின்கம்பங்கள் முறிந்து விழுந்ததோடு, சாலைகளில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களையும் சுழற்காற்று புரட்டிப் போட்டது.

புயல் தாக்கிய சமயத்தில் பலத்த மழையும் கொட்டி தீர்த்தது. மரங்கள் முறிந்து விழுந்து மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. இதனால் மொத்த காமோகாவா நகர் உட்பட சுமார் 9 லட்சத்து 30 ஆயிரம் வீடுகள் மின்சாரமின்றி இருளில் மூழ்கின.

புயலால் வீடுகள், கட்டடங்களும் சேதமடைந்த நிலையில், சிபா நகரை சேர்ந்த 50 வயது பெண்மணி ஒருவர் பலியானார். அதேபோல் இச்சிகாரா பகுதியில் இளம்பெண் ஒருவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதுமட்டுமின்றி புயல் பாதிப்புகளால் மேலும் 12 பேர் காயமடைந்துள்ளனர். சாலை, ரயில் மற்றும் விமானம் என அனைத்து வகையான போக்குவரத்துகளும் கடுமையாக பாதிக்கப்பட்டன.

இதனிடையே சிபா நகரிலுள்ள மிதக்கும் சூரிய ஆற்றல் மின்னுற்பத்தி நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டது.



## வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட பஸ் பாலத்திலிருந்து கவிழ்ந்து 14 பேர் பலி!

ரபாட், செப். 11

மொரோக்கோ நாட்டில் பாலத்தின் மீது சென்ற பஸ் வெள்ளப் பெருக்கில் சிக்கி கவிழ்ந்த விபத்தில் 14 உயிரிழந்தனர்.

மொரோக்கோ நாட்டின் தென்கிழக்கு பகுதியில் உள்ள எர்ராச்சிடியா மாகாணத்தில் கடந்த சில நாள்களாககனமழைபெய்து வருகிறது. இதன் விளைவாக பல பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து பாய்கின்றது.

இந்நிலையில், இங்குள்ள எல் காங்க் நகரின் அருகே நேற்று முன்தினம் பாலத்தின் மீது சென்று கொண்டிருந்த ஒரு பஸ் வெள்ளப் பெருக்கில் சிக்கி கீழே இருந்த பெரிய பள்ளத்தில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மீட்கப்பட்ட 27 பயணிகள் அருகாமையில் உள்ள மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# இந்தியா– பாக். இடையே பதற்றநிலை தணிந்துள்ளது

## அமெ. அதிபர் டிரம்ப் தெரிவிப்பு

வாஷிங்டன், செப் 11

இந்தியா–பாகிஸ்தான் இடையேயான பதற்றம் தணிந்துள்ளது என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.




இந்தியா–பாகிஸ்தான் இடையேயான பதற்றம் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு இருந்ததை போல் இல்லாமல், தற்போது பதற்றம் தணிந்து இருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார். வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த டிரம்ப் கூறியதாவது:

இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர் விவகாரத்தால் முறுகிக் கொண்டு இருந்தன என்பது உங்களுக்கு தெரியும். கடந்த 2 வாரங்களுக்கு முன்பு இருந்தது போல் இல்லாமல் தற்போது, இரு நாடுகளுக்கு இடையேயான பதற்றம் தணிந்து உள்ளது. இரு நாடுகளையும் நான் சிறப்பாக அனுசரித்துச் செல்கிறேன். இந்தியாவும் பாகிஸ்தானும் விரும்பும் பட்சத்தில் நான் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க உதவத் தயாராகவே இருக்கிறேன். இதை அவர்களும் அறிவார்கள் என்றார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன் ஜி 7 மாநாட்டில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பும் பிரதமர் மோடியும் சந்தித்துக் கொண்டனர். இந்த சந்திப்புக்குப் பிறகு முதல் முறையாக அமெரிக்கா காஷ்மீர் விவகாரம் பற்றி கருத்துக் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

காஷ்மீருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து ரத்து நடவடிக்கையால், இந்தியா மீது கடும் அதிருப்தி அடைந்த பாகிஸ்தான், இந்த விவகாரத்தை உலக நாடுகளிடம் கொண்டு போனது.

எனினும், காஷ்மீர் விவகாரத்தில் சர்வதேச நாடுகளின் ஆதரவு பாகிஸ்தானுக்குக் கிடைக்காததால், இந்தியாவுக்கு எதிராகப் பதற்றம் அளிக்கும் வகையில் வார்த்தைப்பிரயோகங்களை அந்நாட்டு அரசியல் தலைவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். (ஐ)

## மெட்ரோ ரயிலுக்குள் துணியை துவைத்து காயவைத்த இளைஞர்

லண்டன், செப் 11

இங்கிலாந்தில் மெட்ரோ ரயிலில் சென்ற பயணி ஒருவர் துணியைத் துவைத்து பிழிந்து காயவைத்த சம்பவம் நகைப்பை ஏற்படுத்தி உள்ளது.

லண்டனில் ஓடும் மெட்ரோ ரயில் ஒன்றில் ஏராளமான பயணிகள் சென்று கொண்டிருந்தனர். அப்போது ஒருவர் சாவகாசமாகத் துணியை எடுத்து, தான் கொண்டு வந்திருந்த போத்தல் நீரை ஊற்றிச் சலவைத்தூள் கலந்து துணியைத் துவைத்து கசக்கிப் பிழிந்தார். இதனை அருகில் அமர்ந்திருந்த மற்ற பயணிகள் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதைப் பற்றி துளியும் கவலைப்படாத அந்த நபர் தான் கையோடு எடுத்து வந்திருந்த கம்பியை விரித்து துணிகளைக் காயப் போட்டு பின்னர் அமைதியாக அமர்ந்து கொண்டார். அந்த நபரின் இந்தச் செய்கை மற்றவர்களிடம் நகைப்பை ஏற்படுத்தியது.



# ரூ.86 லட்சத்தை 2 வாரத்தில் செலவு செய்த அமெ. தம்பதி

நியூயோர்க், செப். 11

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த தம்பதியினர் தங்களது வங்கி கணக்கில் தவறுதலாக வைப்பில் இடப்பட்ட ரூபா. 86 இலட்சத்தை இரண்டே வாரத்தில் ஆடம்பர வாழ்க்கைக்காகச் செலவு செய்தனர்.



அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் உள்ள மாண்டோர்ஸ் வில்லி நகரைச் சேர்ந்த தம்பதி ரொபர்ட் வில்லியம்ஸ்டிப்பனி வில்லியம்ஸ். அண்மையில் டிப்பனி வில்லியம்ஸின் வங்கிக் கணக்கில் தவறுதலாக ஒரு லட்சத்து 20 ஆயிரம் அமெரிக்க டொலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூபா 85 லட்சத்து 92 ஆயிரம்) வைப்பிலிடப்பட்டது.

இப்படி தவறுதலாக வைப்புச் செய்யப்பட்ட பணத்தைச் சம்பந்தப்பட்ட வங்கியிடம் ஒப்படைக்க வேண்டியது சட்டமாகும். ஆனால் ரொபர்ட் வில்லியம்ஸ்டிப்பனி வில்லியம்ஸ் அதை செய்யாமல் தங்களுக்கு கிடைத்த பணத்தை ஆடம்பர வாழ்க்கைக்காக செலவு செய்தனர்.

3 சொகுசு கார்கள் உட்பட ஆடம்பர பொருள்களை வாங்கிக் குவித்த அந்த தம்பதி, தங்கள் நண்பர்களுக்காகவும் செலவு செய்தனர். இப்படி 2 வாரங்களுக்குள், மொத்தப் பணத்தையும் செலவு செய்துவிட்டனர்.

இதற்கிடையில், நீண்ட விசாரணைக்குப் பிறகு டிப்பனி வில்லியம்ஸின் வங்கி கணக்கில் தவறுதலாக பணம் வைப்புச் செய்யப்பட்டதை கண்டுபிடித்த வங்கி நிர்வாகம் அவரை தொடர்பு கொண்டு, பணத்தை திருப்பிச் செலுத்தும்படி அறிவுறுத்தியது.

ஓரிரு நாள்களில் பணத்தை திருப்பி தருவதாக கூறிய தம்பதி பின்னர் வங்கி உடனான தகவல் தொடர்பை துண்டித்துக் கொண்டனர். இதையடுத்து வங்கி நிர்வாகம் அளித்த முறைப்பாட்டின் பேரில் ரொபர்ட் வில்லியம் ஸ்டிப்பனி வில்லியம்ஸ் தம்பதியை பொலிஸார் கைது செய்தனர்.

அவர்கள் மீது திருட்டு உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் விசாரணை நடந்து வருகிறது.

# ஒரே தண்டவாளத்தில் வந்த இரண்டு ரயில்கள்

## காட்பாடியில் பெரும் விபத்து தவிர்ப்பு

காட்பாடி ரயில் நிலையம் அருகே இரண்டு ரயில்கள் ஒரே தண்டவாளத்தில் எதிர் எதிரே வந்த சம்பவத்தால் பயணிகளிடையே அச்சம் ஏற்பட்டது.

காட்பாடியில் இருந்து சென்னைக்கு குடிதண்ணீர் கொண்டு செல்லும் ரயில் நேற்று காலை புறப்பட்டுச் சென்றது. காட்பாடி ரயில் நிலையம் அருகே சென்ற போது, அதே பாதையில் சென்னையில் இருந்து காட்பாடி நோக்கி வந்த பயணிகள் ரயிலும் வந்தது.

ஒரே பாதையில் இரண்டு ரயில்களும் எதிர் எதிரே வந்ததால் பயணிகளிடையே அச்சம் ஏற்பட்டது. ஆனால் அதிர்ஷ்டவசமாக இரண்டு ரயில்களின் சாரதிகளும் துரிதமாக செயல்பட்டு ரயில்களை நிறுத்தினர்.

100 மீற்றர் இடைவெளியில் இரண்டு ரயில்களும் நிறுத்தப்பட்டமையால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

ஒரே தண்டவாளத்தில் இரண்டு ரயில்கள் சென்றது எப்படி? என்பது தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பெரமுன-சு.க. இடையே இடைவெளி அதிகரிப்பு!

## இரு தரப்புப் பேச்சு வெற்றியளிக்கவில்லை

கொழும்பு, செப். 11

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் கூட்டணி அமைப்பதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்ட போதிலும், இரு தரப்புக்கும் இடையிலான விரிசல்கள் அதிகரித்து வருகின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனதிபதித் தேர்தலில் பொதுச் சின்னத்தில் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிட்டால் ஆதரவளிக்க முடியும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூறியுள்ளது.

எனினும், அந்த நிபந்தனையை ஏற்க முடியாது எனப் பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்காக, தேர்தல் ஆணைக்குழுவிடம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விருப்பம் வெளியிட்டுள்ளது.

இரு தரப்புப் பேச்சுக்கள் இழுபறிக்குள்ளாகியிருக்கும் நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு இல்லாவிட்டாலும் தனித்தே போட்டியிட்டு வெற்றி பெற முடியும் என பொதுஜன பெரமுன தலைவர்கள் பலரும் கூறத் தொடங்கியுள்ளனர்.

தனித்துப் போட்டியிட்டால் சுதந்திரக் கட்சிக்கே பாதிப்பு என்றும் அவர்கள் எச்சரித்து வருகின்றனர்.

அதேவேளை, தமது ஆதரவின்றி எந்தக் கட்சியினாலும் 47 வீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப்பெற முடியாது என்று சுதந்திரக் கட்சி தலைவர்கள் கூறுகின்றனர்.

இதனால் இரு தரப்புக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துள்ளது. (ஐ)

## பாதுகாப்பு அமைச்சின் கீழ் ரூபவாஹினி; வர்த்தமானியை வெளியிட்டார் மைத்திரி

கொழும்பு, செப். 11

அரச தொலைக்காட்சியான ரூபவாஹினி நிறுவனத்தை, நேற்றுமுன்தினம் நள்ளிரவில் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்வசமுள்ள பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ், கொண்டு வந்துள்ளார்.

முன்னர் ஊடகத்துறை அமைச்சின் கட்டுப்பாட்டில் இருந்த ரூபவாஹினி கூட்டுத்தாபனம், நேற்றுமுன்தினம் நள்ளிரவில் இருந்து பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுவதாக, ஜனாதிபதி நேற்று முன்தினம் இரவு வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் நியமனம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக, எழுந்த சர்ச்சைகளை அடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஐ)

## மட்டு சிறைக்குள் வரதர் பிள்ளையானுடன் பேச்சு



மட்டக்களப்பு, செப். 11

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை, வடக்கு கிழக்குமாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் நேற்று முன்தினம் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் சந்தித்து பேசியுள்ளார்.



இந்தச் சந்திப்பின்போது அரசியல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதாக அறிய முடிகின்றது.

இந்தச் சந்திப்பின்போது முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூ. பிரசாந்தன், வவுணதீவு பிரதேச சபை உறுப்பினர் குகன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

## பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில்

# புதிய தொழில்நுட்பக்கூடம் சுமந்திரனால் திறந்துவைப்பு











யாழ்ப்பானம், செப். 11

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 6 கோடி ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடி தொழில்நுட்பக்கூடம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தொழில்நுட்பக்கூடத்தைத் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், பருத்தித்துறை நகர பிதா யோ. இருதயராஜா, பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரியகுமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)



LATHA TAILORING & EMBROIDERY DESIGNING

SAREE BLOUSE
EMBROIDERY WORK
WOMEN'S & MENS ALTERATION
COUSTUMES
CHUBIDAR & MORE AVAILABLE





Unit 8 Champion Mall
495 High Road
Wembley HAO 2DH
Tel:07459 078 919



# மரண அறிவித்தல்




## அமரர் தம்பிப்பிள்ளை பரராசசிங்கம்

**(அரச ஒப்பந்தகாரரும் அகில இலங்கை சமாதான நீதவானும்)**

களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும், சின்னாலடி காரைநகர் மற்றும் 448, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பரராசசிங்கம் 09.09.2019 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை – சவுந்தரம் தம்பதியினரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற கந்தையா – பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், பராசக்தியின் (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், நந்தகுமார் (சுகாதார வைத்திய அதிகாரி, ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர்), சுகந்தினி (கணனி மென் பொறியியலாளர்), சந்திரகுமார் (ஊடகவியலாளர், “சமூகம்” ஊடக நிறுவனம்), இந்திரகுமார் (உள்ளக மருத்துவர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதீஸ்குமார் (கணனி மென் பொறியியலாளர் – இங்கிலாந்து), சாலினி (மருத்துவர் – பிரதேச வைத்தியசாலை, மானிப்பாய்), ஜெயசித்திராதேவி (தாதிய உத்தியோகத்தர் – யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அரவிந்த், அபிநயா, சிவாஞ்சலி, சிவகீதன் ஆகியோரின் அன்புப் பேரனும், துரைராசசிங்கம் (அமெரிக்கா), பகவத்சிங்கம் (முன்னாள் மாவட்ட உணவுக் களஞ்சியப் பொறுப்பாளர்), காலஞ்சென்ற சிவசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2019) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு, இல 448, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது, பூதவுடல் மு.ப. 10 மணிக்கு கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு தகனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**448, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம். 021 221 9303**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**